[illegible]

V 2. No. 21 23 My 1929

൧

ത്ത211, N28KN
N29·2·21.
189056

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ மே ௴ 23உ [No. 21.

OFFICE OF THE REGISTRAR ... 1929 MADRAS

189056

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	401
2.	அப்பர் E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	403
3.	ஏமாங்கதத் திளவரசன் (A Novel) T. N. சேஷாசலம் B.A., B.L.	405
4.	மாறன் பாப் பாவினம் (K. நாராயண ரெட்டிகாரு அனுப்பிய பிரதி)	407
5.	தமிழ்ப் பாடம்	4(9
6.	கும்பகர்ணன்—R. முத்தையர்	412
7.	குலசேகரர் T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L.	413
8.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A, B. L.	415
9	வர்த்தமானம்	419

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்ப இயலாது.

மானேஜர்.

கலா நிலயம்

இராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் சங்கீத கலாசாலை.

பேருவகை யுருவாய எம்பிரான் திருநடம் புரிதற்கு உளங்கொண்ட பெருமையாற் பொலிதருந் தில்லையம்பதியின்கண் கலைமகள் தனக்குரிய பல கோலங்களோடு வலம்வந்து வைகுதற்கு இக்காலம் விழைவதைக் காண நாம் அளவிலா மகிழ்வு அடைந்தவராகின்றோம். வருமவள் பரிவுடன் எழுந்தருளக் கோயில்கள் அமைத்துத் திருப்பணிசெய்வார் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார். அன்னவர் முயற்சியால் அங்குத் தமிழ்ச் சர்வகலாசாலையொன்று நிறுவப்பெறலாயிற்று. பணம் சம்பாதிப்பதற்கு ஏற்ற பாடங்களையும் தொழில்களையும் அச்சர்வகலாசாலை போதித்தல் வேண்டுமென வொருசிலர் வாதித்தனர். இந்நோக்கம் வந்து இடைப்புகுமாயின் அத் தமிழ்க் கலைச்சாலையின் தூய்மை தேய்ந்தழியுமென முன்னோர் இடத்தில் கூறியுள்ளோம். கலையைத் தொழிலென்றும், தொழிலைக் கலையென்றும் மயங்கிக் கலவாது அவ்விரண்டையும் அவ்வவற்றிற்குரிய தனித்தனி தன்மையால் காண்பதே தெளிந்த காட்சியாம் என்பதைக் கலாநிலயம் பல்வேறு இடங்களில் பல்வேறு வகைகளில் பலசால் புகன்றுகொண்டு வருகின்றது. இதற்கிணங்கிய நோக்கத்துடன், ஆய்ந்தமைக்கும் பாடங்களாலும் போதிக்கும் முறையாலும் ஆசிரியர் திறத்தாலும், மாணவர்க்கு நம் காவியக் கலைகளின் பால் நிறைந்த ஆசையும் அறிவும் புகட்டித் தந்தம் வாழ்க்கையே ஒவ்வோர் இலக்கியமாகச் செலுத்துதற்கியன்றவோர் நிலையை எய்துவிக்குமாயின் இந்தத் தமிழ்ச் சர்வகலாசாலை தன்னுடைய மக்களை வாழ்விக்க வந்ததொரு அன்னையாம். இல்லையெனில், மற்றெல்லாச் சர்வகலாசாலைகளையும்போல், அதுவும் ஆசிரியர் இத்தனை; பிள்ளைகள் இத்தனை, வரவு செலவு இத்தனை, அங்கத்தினர் இத்தனை, அதனிற் படித்து வெளிவந்து 'எனக்கு எனக்கு' என்று அலைகின்றவர் தொகுதி இத்தனை இத்தனை என்ற கணக்கோடு முடிவதல்லால் வேறொன்றும் முடியும்வகையில்லை என்பது வெளிப்படை. ஆதலால், இச்சர்வகலாசாலையைத் தமிழ் நாட்டிற்கு நன்கொடைபுரிந்த வள்ளலாரது நோக்கம் அதன்கண் இனிதின் நிறைவேறக்காண வேண்டுமெனும் அவாவுடன் கலாநிலயம் காத்திருக்கின்றது. காலவளவி லது தெரியலாகும். அன்பினால் அளித்த நன்கொடையினின்று நன்னலங்கள் யாவுந் தழைக்குமென எதிர்பார்த் திருத்தலே நேர்.

இவ்விதம் நோக்கம் ஒன்றுமாய் நடப்பது வேறுமாய் மற்றக் கலாசாலைகளில் நிகழஇயல்வதுபோல், சென்றவாரம் இராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் சிதம்பரத்தில் தாபித்த சங்கீத கலாசாலையில் வேண்டுமெனினும் இயலாது என எண்ணுகின்றோம். கல்வியைக் கற்க வந்திருப்பதாகப் பாவித்து அது அல்லாத கைத்தொழிலும் வாய்த்தொழிலும் பயின்று அலக்கணுற இச்சங்கீத கலாசாலையில் வசதியில்லை. பாட வந்தவர் பாடித்தான் தீர்தல்வேண்டும்.

11792
12. C. R-70

இதுபற்றி நாம் இச்சங்கீத கலாசாலையின்பால் பெரிதும் நம்பிக்கையுடையவரா யிருக்கின்றோம்.

இதுவுமன்றி, வித்வான் T. S. சபேச ஐயரவர்கள் அதற்கு முதல் தலைமையாசிரியராயமைந்தது அதன் வளர்ச்சிக்கு ஒரு நற்குறியாகும். அறிவுவாய்ந்தவர். சங்கீத சாத்திரத்தின் நுணுக்கங்களிலெல்லாம் நன்கு தேர்ந்தவர். யாவருடைய நன்மதிப்பிற்கும் பாத்திரமானவர். எவரோடும் இனிய முகங்கொண்டு பயில்கின்ற குணநலம் வாய்ந்தவர். மகாவைத்தியநாத ஐயர் தம் மாணவர். எல்லாப்படியாலும் அச் சங்கீதகலாசாலைக்குத் தலைமைவகிப்பதற்கு இவர்திறம் வேறு சிலர் தேடலரிது. அச்சமும் ஆசையுமின்றித் தனக்கும் தன்னுடைய கடவுளுக்கும் உண்மையாய், மாணவர் நலத்தைத் தன் கருத்தின் முதலாக அமைத்துச் செய்வன சிறக்கவாற்றி இவ்விசைக் கலைச்சாலை யென்னும் பிள்ளையை நன்கு போற்றுதற்குரியவர் வித்வான் சபேச ஐயர் ஆவார்.

இக்கலாசாலையைத் திறந்துவைத்த அந்நன்னாள் இராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் பல வித்வான்களை வரவழைத்து, அவர்களுக்குப் பரிசில்கள் அளித்த வைபவத்தைக் கேட்க மிக மகிழ்கின்றோம். இத்தகைய விழாக்களே ஒருநாட்டின் பெருமைக்கு இலக்கணம். அரசர்கள் அறிந்தவொரு பெருமையிதுவாதலால் இராஜா ஸர். அண்ணாமலை செட்டியார், கலைவலார்திறத்திற் கொண்டுள இப்பரிவு புதுமையன்று. இப்பெரியார் கொடையும் பெறுவோர் புலமையும் பலவாகிப் பெருகுக.

இசையும் இலக்கியத்தைப்போல் மனத்தினைப் பண்படுத்தவல்ல கலைகளுள் ஒன்றுவதன்றி, அவையிரண்டிற்கும் நெருங்கிய உறவுமுண்டு. யாவருக்குமே இலக்கியத்தில் ஓரளவு பயிற்சி இருப்பது நலமென்பதை மறுப்பார் வெகுசிலர். அதனினும் இசையினைப் பயில்வோர்க்கு இலக்கியச் சுவையும் சிறிது சேருமாயின் பொன்மலர் மணமும் உடையது போலாம். ஆதலின், இவ்விசைக்கலைச் சாலையில் தமிழ் இலக்கியத்திற்கும் சிறிதிடந் தருமாறு நாம் பெரிதும்விழைகின்றோம். இதனால், இசைபயிலவரும்மாணவர்களைத் தமிழ் இலக்கண இலக்கிய பண்டிதர்க ளாக்கிவிட வேண்டுமென்பது எமது கருத்தன்று. இவர்களுக்கு இலக்கணம் என்ற தனிப்பாடமொன்று வேண்டியதேயில்லை. தமிழ்மொழி, சரித்திரம் முதலிய ஆராய்ச்சிகளில் இவர்களது நேரத்தைச் செலவிடவேண்டா. தமிழ்க் கவிகளை எடுத்துத் தட்டாமல் படிப்பதற்கும் அவைகளது பொருளைத் தெரிந்துகொள்வதற்கும் வேண்டிய பயிற்சியை இவர்கள் பெற்றால் போதும். இது வெகு சுலபமான காரியம். வாரத்திற்கு இரண்டு மணிநேரம் இலக்கிய வகுப்பிற்கென்று பிரித்து வைத்தால், நான்கு வருடங்களுக்குள் தமிழ் இலக்கியத்தில் இம்மாணவர் இரண்டாயிரம் செய்யுள்களுக்குமேல் படித்தவர்களாவர். ஆசிரியர், அனுபவமுள்ளவராயும் இலக்கியவுணர்வில் ஈடுபட்டவராயும் இருப்பாராயின், நளவெண்பாவில் ஆரம்பம் செய்து படிப்படியாக உயர்த்திக்கொண்டுபோய், வெகு எளிதில் ஒருவருக்கும் சிரமம் தோன்றாமல் கம்பராமாயணத்தில் ஒருகாண்டம் போதித்து முடிக்கஇயலும். இரண்டாவது வருடத்து இறுதியிலேயே மாணவர் பெரும்பான்மை, செய்யுள்களின் பொருளைப் பிறர் உதவியின்றித் தாங்களே அறிந்துகொள்ளக் கூடிய திறமையுடையவர்க ளாவர். பின்னிரண்டாண்டுகளின் பயிற்சியினதுபயனாப் பொருள் தெரிவதோடு கவிநயம் உணரக்கூடியவரும், தாமே கவிபாடவல்லவரும் ஆகலாம். எவ்வாற்றானும் கவிச்சுவை அவர் கைக்கு எட்டியதாகும். கலையின் மாட்சியை உணர்ந்தவராவர். இசையிற் பயில வந்துள மாணவர்களது கவனத்தையும் காலத்தையும் கவராது இவ்வண்ணம் விளையாட்டாக இலக்கியச் சுவையும் அவர்களுக்கு அளித்து வருவதால் அவர்களுக்கும், அவர் கற்கும் சங்கீதத்திற்கும், நாட்டிற்கும் விளையக்கூடிய நலங்களின் அளவும் தன்மையும் இன்னபடியிருக்குமென்பதை நாம் எடுத்துக் காட்டுவது மிகை.

யாவருக்கும், அதனினும் சிறப்பாக இசை பயில்வோர்க்கு, இலக்கியப்பயிற்சி பல நலங்களுக்கு விளைநிலமாகுமென்பதை மறுக்காவிடினும், நாம் சொன்ன இவ்வெளிய முறையில் தமிழ்ப்பயிற்சி கைகூடுமோவெனச் சிலர் அயிர்க்கலாம். நாமிதனை இங்கு ஆலோசியாமற் கூறவில்லை. எமது அண்மிய நண்பரும் இப்பத்திரிகையில் கம்பராமாயணக் கட்டுரை முதலியன வரைந்து வருபவருமாய ஸ்ரீமான் T. N. சேஷாசலம், மற்றுஞ் சிலநண்பர் துணைகொண்டு பகலில் பற்பல தொழில்களில் அமர்ந்திருப்போர்க்குத் தமிழிலக்கியப்பயிற்சியளிக்குமாறு சென்றபல வாண்டுகளாகச் சென்னையின்கண் இலவசப்பாடசாலைகள் சில இரவில் நடத்தி வருகின்றதையும், அங்குக்கையாளும் முறைகளையும், அதன் பயனையும், நாம் நன்கு அறிவோம். வகுப்பொன்றிற்கு வாரம் ஒன்றிற்கு அவர் ஒன்றரைமணி நேரந்தான் தமிழ் இலக்கியப்பாடம் போதிக்கின்றார். எனினும் இரண்டு வருடங்களில் அவர் மாணவர், நளவெண்பா, பாரதம் அஷ்டப்பிரபந்தம் நைடதம் தாயுமானவர் கம்பராமாயணம் முதலிய நூல்களிலிருந்து தேர்ந்தசெய்யுள்கள் எழுநூற்றிற்கு மேல் கற்றுத் தமிழில் ஆர்வமும் வாழ்க்கையில் ஊக்கமும் உடையவர்களாய், ஆண்டுதோறும் பற்பலர் பாடசாலையை முடித்து வெளிவரக் காணலாகின்றோம்.

இத்துணை எளியதும் இனியதும் கற்பவர்க்கும் நம் நாட்டிற்கும் எண்ணரிய நன்மைகள் வாய்ப்பதற்காதாரமாயிருப்பதுமாய தமிழிலக்கியக் கலையுணர்வை இச்சங்கீத கலாசாலை மாணவர்களுக்கு அளிக்குமாறு இராஜா. ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்களும் தலைமையாசிரியர் ஸ்ரீமான் சபேசஐயரவர்களும் மனங்கொண்டு முயற்சி செய்வாராயின் இம்மாணவர்களும் தமிழுலகமும் பின்னாள் அவர்களைப் பெரிதும் வாழ்த்தும். அமயமும் வசதியுங் கிடைக்குமிடமெல்லாம் நற்றமிழ்ச் சுவையை நல்குவது நன்று. இதனமைதியை எடுத்துக் காட்டுமாற்றால் கலாநிலயம் தனக்குரிய கடமைகளுள் ஒன்று இங்குச் செய்ததாயிற்று.

OFFICE OF THE REG... 1929 MADRAS

அப்பர்

4. பெரியபுராணத்தில் காணாத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்

2. தஞ்சைஜில்லாத் திருப்பதிகளின் முற்பகுதி. சீர்காழியில் அப்பர் பாடியது முதல் திருப்பழையாறையில் சமணழித்த வரையில்.

(ii) இரண்டாம் தோகுதி

387 பக்கத் தொடர்ச்சி

(6) திருப்பந்தணைநல்லூர்-இதில் அப்பர் பாடிய திருத்தாண்டகப் பதிகம் ஒன்று திருமுறையிற் காணலாம். "பைங்கணேற்றார், பலிபேற்றார் பந்தணை நல்லூராரே" என்னும் முடிவுடைய பாசுரங்கள் சிவத்தன்மையை விளக்கும். இத்திருப்பதிக்கு அப்பர் திருக்குறுக்கையினின்று சென்றனரென்பது நாம் அனுமானிக்கலாகும். *

(7) பந்தணைநல்லூரினின்று திருநீடூருக்குச்செல்லு மார்க்கத்தில் திருஅன்னியூர் † என்னும் பொன்னூர் இருக்கிறது. இந்தவூரில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகை ஒன்று திருமுறையிற் காணலாம். இதன் 5-ம் பாசுரமும், சம்பந்தர் 6-ம் பாசுரமும் ஒரே தன்மையனவாய் விளங்கும் ‡. அப்பர் 6-ம் பாசுரமும் சம்பந்தர் 7-ம் பாசுரமும் முறையே சிவபெருமானை "அந்தணாளர்" என்றும், "அந்தணாளர்தம் தந்தை" என்றும் கூறுவதையும் காண்க. சம்பந்தர் 4-ம் பாசுரமே அப்பர் 3-ம் பாசுர விஷயமாம். இவ்வொற்றுமை தற்செயலாய் வந்ததா அல்லவா என்பதை அறிஞர் ஆராய்க.

(iii) மூன்றாவது தோகுதி

இனி, திருக்கோழம்பம் (8) திருக்கஞ்சனூர் (9) திருநல்லம் (10) திருமங்கலக்குடி (11) திருக்குரங்காடுதுறை (12) திரு ஆப்பாடி (13) திருநீலக்குடி $ (14) யென்னும் ஏழு திருப்பதிகளின் அப்பர்பதிகங்களைச் சற்றுக் கவனிப்போம்.

(8) திருக்கோழம்பத்தில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகை 11 பாசுரங்களடங்கிய பதிகம் ஒன்றும் சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றும் திருமுறைகளில் உள. அப்பர் திருக்குறுந்தொகையில், இவர் சமணராயிருந்த நாளில் திருக்கோழம்பத்தில் சிலநாளிருந்தாரெனக் கூறுகின்றார். இதன் 8-வது பாசுரத்தை † நீலக்குடியின் திருப்பதிகத்தில் 1,5,6,7 பாசுரங்களுடன் உற்றுநோக்குவோமாயின் அப்பர் சமண வாழ்க்கை சற்று வெளியாகின்றது.

அப்பர் திருவாய்மலர்ந்த இப்பதிகத்தின் ஏழாவது பாசுரத்தில் இரண்டு பாடபேதங்கள் உள. அவை

முன்னை நான்செய்த பாவ முதலறப்
பின்னை நான்பெரி தும்மருள் பெற்றது
அன்ன மார்வயற் கோழம்பத் துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே

என்பது ஒன்று.

ஷ பாசுரத்தில் 2-வது வரியி னிறுதியில் "பெற்றதும்" என்பது மற்றொன்று. இதில் 2-வது பாடமே பழம்பிரதிகளி லுள்ளதாம். ஆராய்ச்சியின்கண் இதுவே பொருத்தமாகவும் காணப்படுகின்றது ¶.

திருஞான சம்பந்தர் இத்திருப்பதியில் பாடிய பதிகத்தை உற்று நோக்கின் அப்பர் பதிகம் இவர் நினைவிலிருந்திருக்கலாமென்றும் நாம் எண்ண நேருகின்றது ‡. விஷயஒற்றுமை மாத்திரமன்று. அப்பர் திருக்குறுந்தொகையும் சம்பந்தர் இந்தளப்பண்ணும் இசை

* திருஞானசம்பந்தர் யாத்திரையில் திருக்குறுக்கை விட்டுத் திருப்பந்தணைநல்லூருக்குச் சென்றதாய்ப் பெரிய புராணம் கூறும். ஆகையால் அப்பரும் திருக்குறுக்கையினின்று திருநீடூருக்குச் செல்வதன்முன் திருப்பந்தணைநல்லூர் சென்றாரென அநுமானிக்கலாகும்.

திருக்குறுக்கைப் பதிமன்னித் திருவீரட்டா னத்தமர்ந்த
பொருவில்லா ளரையேத்திப் போர்தன்னியூர் சென்று [போற்றிப்
பருக்கைவரை யுரித்தார்தம் பந்தணைநல் லூர்பணிந்து
விருப்புடன்பா டலிசைத்தார் வேதந்தமிழால் விரித்தார்

—சம்பந்தநாயனார் புராணம் 289.

† ஆனைத்தண்டாபுரம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே ஒருமைலிலுள்ள திருநீடூரிலிருந்து மேற்கே 3.மைலில் இவ்வூர் இருக்கின்றது.

‡ எம்பி ரானிமை யோர்க டமக்கெலாம்
இன்ப ராகி யிருந்தவெம் மீசனார்
துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்
கன்ப ராகிநின் றாரன்னி யூரரே —அப்பர்

இன்பம் வேண்டுவீர் அன்ப னன்னியூர்
நன்பொ னென்னுமின் உம்ப ராகவே —சம்பந்தர்

$ நரசிங்கம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து ஒருமைலில் தென்கிழக்கில் திருவாவடுதுறை யிருக்கிறது. இதற்குத் தெற்கே 1½மைலில் திருக்கோழம்பம் (8).

ஷ ஸ்டேஷனுக்கு 1 மைலில் வடக்கே அதாவது திருவாடுதுறைக்கு வடமேற்கே 2 மைலில் திருக்கஞ்சனூர் (9). இதினின்று கிழக்கே 2மைலில் திருக்கோடிக்கா.

திருக்கோழம்பத்திற்கு 4 மைலில் ஆடுதுறை ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள கோனேரிராஜபுர மென்கிற திருநல்லம் (10). திருக்கஞ்சனூரிலிருந்து ஒருமைலில் திருமங்கலக்குடி (11). இது ஆடுதுறை ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே ¾மைலிலுள்ளது(12). தென்குரங்காடுதுறை (ஆடுதுறை) ஊரினின்று 2 மைலில் காவிரிக்கு வடகரையிலுள்ளது.

ஆடுதுறை ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 7½ மைலில் திரு ஆப்பாடி (13) இருக்கிறது. இது திருவிடை மருதூரிலிருந்து 7 மைல்.

ஆடுதுறை ஸ்டேஷனுக்குத் தெற்கே 2 மைலில் திருநீலக்குடி என்பது தென்னக்குடி என்று வழங்கும். இது திருநீலக்குடி (14)க்கு மேற்கே 5 மைலில் திருநாகேச்சுரம் இருக்கிறது.

† ஏழை மாரிட நின்றிரு கைக்கொடுண்
கோழை மாரொடுங் கூடிய குற்றமாம்
கூழை பாய்வயல் கோழம்பத் தானடி
ஏழை யேன்முன் மறந்தங் கிருந்ததே

திருக்கோழம்பம்—திருக்குறுந்தொகை 8.

¶ சுவாமிநாத பண்டிதர் 1-வது பாடத்தை ஆமோதிக்கின்றார். திருஞான சம்பந்தர் இங்குப் பாடியதையும் நோக்குக:—

‡ மையான கண்டனை மான்மறி யேந்திய
கையானைக் கடிபொழில் கோழம்ப மேவிய
செய்யானைத் தேனெய்பா லுந்திகழ்ந் தாடிய
மெய்யானை மேவுவார் மேல்வினை மேவாவே

—சம்பந்தர் (2)

யில் பேதப்படினும் யாப்பில் அவ்வளவு பேதங் காணப்படவில்லை. அப்பர் திருக்குறுந்தொகை, "நேர் பதினொன்று, நிரை பனிரெண்டு என்னும் கட்டளை பெற்றதாய்ப் பெரும்பாலும் ஒரு மாச்சீர் பின்னர் மூன்று கூவிளச் சீர்களுடன் அடிகள் விளங்கும். சம்பந்தர் பதிகத்தின் பாசுரங்கள் ஒரு மாங்காய்ச் சீருக்குப் பின்னர் மூன்று விளச்சீர்கள் "நேர் பனிரெண்டு, நிரை பதின்மூன்று"கிய கட்டளை பெற்ற அடிகளைப் பெற்றவையாம். இப்பாசுரங்கள் யாவும், மேற்கண்ட அப்பர் பாசுரம் "முன்நான் செய்தபாவ" மென்னுமதற்கு விருத்தி யுரைபோல் விளங்குகின்றது.

(9) திருக்கஞ்சனூரில் அப்பர் பாடிய திருத்தாண்டகம் ஒன்றே தேவாரத்தில் இருக்கிறது. இதன் பத்து பாசுரங்களும் "கஞ்சனூராண்ட கோவைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டதை" விளக்கும். இதில் 2-ம் பாசுரம் 'கலையான்' என்றும், 4-ம் பாசுரம் 'கண்ணவன்' என்றும், 5-ம் பாசுரம் "நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக் கருத்தவன்" என்றும், 9-ம் பாசுரம் "விளக்கொளியாய் மெய்யாகி, மிக்கோர் போற்றும் கருத்தவன்" என்றும் மொழியும்.

(10) திருநல்லம்:—இதில் சம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும் அப்பர் திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும் பாடப்பட்டன தேவாரத்தில் உள. திருஞானசம்பந்தரின் 2-ம் பாசுரமும் *, அப்பர் 2-ம் பாசுரமும் † ஒரே தன்மையாய் விளங்குகின்றன.

(11) திருமங்கலக்குடி:—இப்பதியில் திருஞான சம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும், அப்பர் திருக்குறுந்தொகை யொன்றும் திருமுறைகளிற் காணலாம். இவ்விருவர் 6-ம் பாசுரங்கள் ஒரு தன்மையாய் விளங்கும் *. இத்தலத்தின் மகிமையைச் சம்பந்தர் முதற் பாசுரத்தாலும், அப்பர் மூன்றும் பாசுரத்தாலும் அறியலாம் $. காவிரிநதியின் வடகரையில் மரங்களடர்ந்த சோலையுடைத்தாயது என்றும், செல்வமும் பெருகியிருந்த தென்றும், அந்நகர் பூதநாயகன் புண்ணிய மூர்த்தியை நன்னெறி தொடர்வெய்தத் துன்னுவாரென்றும், குண்டர் குணமிலா மாசர்பால் தன்னை அவ்வீசன் வேறுபடுக்க வுய்ந்ததாகவும் அப்பர் பாடுகின்றனர் ‡.

(12) திருக்குரங்காடுதுறை:—இதைத் தென்குரங்காடுதுறையென்றும் *, ஆடுதுறையென்றும் கூறுவார். இதில் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும் திருமுறைகளில் உள. அவற்றுள் சம்பந்தர் 2-ம் பாசுரமும் அப்பர் முதல் பாசுரமும் ஒரு தன்மைய †. அங்ஙனமே சம்பந்தர் 4-ம் பாசுரமும் அப்பர் 9-ம் பாசுரமும் ஒரேவிஷயம் விவரிக்கின்றன ‡. அப்பர் 6-ம் பாசுரம் அவர் சமணத்தில் நின்றதை எண்ணி வருந்தியதாகும் $. சம்பந்தர் 7-ம் பாசுரம் "பழகும் வினைதீர்ப்பவன்" என்பதும், அப்பர் 10-ம் பாசுரத்தின் "பற்றுந் தீவினை யாயின பாறுமே" என்பதும், "பழகினால் வரும் பண்டுள சுற்றமும்" என்னும் அப்பர் பாசுரத்தை நினைவூட்டுகின்றன. இத்தகைய பதிகங்கள் வாய்ந்த "பொன்கொழிக்கும் புனல் காவிரிக்கரை" மேலுள்ளது இப்பதியாம்.

(13) திரு ஆப்பாடி:—இப்பதியில் திருநாவுக்கரசர் பாடிய திருநேரிசைப்பதிகம் ஒன்றே திருமுறைகளில் காண்கிறோம். இதிலுள்ள பத்து பாசுரங்களும் சிவத்தின் தன்மை எங்கு நிறைந்த அழலுறுவென்றும் *, அதன் விளக்கமே மனிதர் தெளிவென்றும் † அது அணுவுக்கணுவாய் இங்கு நிறைவதுடன் அண்டங்களுக்கு அப்பாலும் யாவற்றினுக்கும் இறுதியாய் நிற்கின்றதெனவும், அத்தன்மையே பிரமனும் மாலுங் காணாச் சீர் என்றும், கொடுமை நிறைந்த அரக்கன் அடாது செய்தும் அலறி வீழ்ந்து பாடினவுடன் அருள்சுரக்கத் தடையொன்றுமில்லாத் தன்மையென்றும் ‡ விளக்குகின்றனர்.

(14) திருநீலக்குடி:—இப்பதியில் அப்பர் திருக்குறுந்தொகை யொன்றே திருமுறையுள் காணக்கூடியதாம். இப்பதிகம் ஆராய்ச்சிக்கு விரிவான இடமாய் விளங்குகின்றது. அப்பர் சமணரா யிருந்த காலத்தில் இந்நகரில் பற்றுள்ள சுற்றம் வசித்திருக்கலாமென்றும் அவர்களைக் குறிப்பிட்டு இப்பதிகம் பாடினரோ வென்பதுமாய ஐயுறவு நமக்கு உண்டாகின்றது. இப்பதிகத்திலேயே சமணர் கல்லிற்பூட்டித் தன்னைக் கடலிலிட்டதும் தான் அரன்றன் நாமம் நவின்று தப்பியதும் பாடுகின்றார்.

இப்பதிகம் பத்து பாசுரங்கள் பெற்றது. இவை யாவும் தர்க்க வொழுங்காய்ச் சொல்வன்மையுடன் அமையப்பெற்று, முதற் பாசுரத்தில் வகுத்துக்காட்டியதைப் பத்தாம் பாசுரத்தில் இராவணனை உதாரணமாகக்காட்டி இரக்கமான அருள் எம்பிரானுக்கு என்றும் உண்டென்று தொகுத்து முடிக்கும்.

மேற்கூறிய ஏழு திருப்பதிகளில் அப்பர் பாடிய பதிகங்கள், விஷயத்தில் ஒற்றுமையா யிருப்பதுடன் நடையிலும் ஒரு தன்மையா யிருக்கின்றன. இவ்வூர்கள் ஒன்றுக்கொன்று அக்கால வியலுக்குச் சமீபமென்றே யெண்ண வேண்டியன. பெரியபுராண வரலாற்றில் அப்பர்சீர்காழிவிட்டுத் திருக்குடமூக்குக்குச் செல்லும் காலை, இப்பதிகள் யாவும் தரிசிக்கப்பட்டனவெனினும் பொருந்தும். ஆயினும் இவ்விஷயம் ஆராய்ச்சியால் வெளியாக வேண்டியதால் அறிஞர் இத்தல புராணங்கள் முதலிய நூல்கள் வாயிலாக ஆராய்வாராக.

* தக்கன்பெரு வேள்வி தன்னி லமரரைத்
துக்கம்பல செய்து சுடர்பொற் சடைதாழக்
கொக்கின் னிறகோடு குளிர்வெண் பிறைசூடும்
நக்கன் நமையாள்வான் நல்ல நகரானே
— சம்பந்தர்-பண்-குறிஞ்சி 2.

† பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்ல நண்ணுதல் நன்மையே
— திருநல்லம்-திருக்குறுந்தொகை 2.

* (i) தேனு மாயமு தாகிநின் றொன்றெளி சிந்தையுள்
வானு மாய்மதி சூடவல் லான்மங்க லக்குடி
கோனை நாடொறு மேத்திக் குணங்கொடு கூறுவார்
ஊன மானவை போயறு முய்யும் வகையதே
—சம்பந்தர்

(ii) மன்னு சீர்மங் கலக்குடி மன்னிய
பின்னு வார்சடைப் பிஞ்ஞகன் றன்பெயர்
உன்னு வாரு முரைக்கவல் லார்களும்
துன்னு வார்நன் னெறிதொடர் வெய்தவே.
— அப்பர்

$ (i) சீரி னார்மணி யும்மகில் சந்தும் செறிவரை
வாரி நீர்வரு பொன்னிவ டமங்க லக்குடி
நீரின் மாமுனி வன்னெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித் தாட்டியர்ச் சிக்கவி ருந்தபு ராணனே.
—சம்பந்தர்

(ii) மங்க லக்குடி யீசனை மாகாளி
வெங்க திர்ச்செல்வன் விண்ணொடு மண்ணுநேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்க கத்திய னும்மர்ச்சித் தாரன்றே
— அப்பர்

‡ அப்பர் 9-ம் பாசுரத்தையும் சம்பந்தர் 10-ம்பாசுரத்தின் முதல் பாகத்தையும் நோக்குக.

* திருவடகுரங்காடுதுறையில் அப்பர் பாடல் யாதும் திருமுறைகளிற் காணோம்.

† (i) விண்டார்புர மூன்று மெரித்த விமலன்
இண்டார்புரங் காட்டிடை நின்றெரி யாடி
வண்டார்கரு மென்குழன் மங்கையொர் பாகம்
கொண்டா னகர்போல் குரங்காடு துறையே
—சம்பந்தர்

(ii) இரங்கா வன்மனத் தார்க ளியங்குமுப்
புரங்கா வல்லழி யப்பொடி யாக்கினான்
தரங்கா டுந்தட நீர்ப்பொன்னித் தென்கரைக்
குரங்கா டுதுறைக் கோலக் கபாலியே
— அப்பர்

‡ (i) விழிக்குந் நுதல்மே லொருவெண் பிறைசூடி
—சம்பந்தர்

(ii) தென்ற னன்னெடுந் தேருடை யானுடல்
பொன்ற வெங்கனல் பொங்க விழித்தவன்
— அப்பர்

$ ஆட்டி னான்முன் னமணரோ டென்றனைப்
பாட்டி னான்றன பொன்னடிக் கின்னிசை
வீட்டி னான்வினை மெய்யடி யாரொடும்
கூட்டி னான்குரங் காடு துறையனே
—திருக்குரங்காடுதுறை- திருக்குறுந்தொகை

* கடலக மேழி னோடும் புவனமுங் கலந்த விண்ணும்
உடலகத் துயிரும் பாரு மொள்ளழ லாகி நின்று
தடமலர்க் கந்த மாலை தண்மதி பகலு மாகி
மடலவிழ் கொன்றை சூடி மன்னுமாப் பாடி யாரே

† உள்ளுமாய்ப் புறமு மாகி யுருவமா யருவு மாகி
வெள்ளமாய்க் கரையு மாகி விரிகதிர் ஞாயி றாகிக்
கள்ளமாய்க் கள்ளத் துள்ளார் கருத்துமா யருத்த மாகி
அள்ளுவார்க் கள்ளல் செய்திட் டிருந்தவாப் பாடி யாரே

‡ திண்டிற லரக்க னோடிச் சீகயி லாயந் தன்னை
எண்டிற லிலனு மாகி யெடுத்தலு மேழை யஞ்ச
விண்டிற நெரிய வூன்றி மிகக்கடுத் தலறி வீழப்
பண்டிறல் கேட்டு கந்த பரமராப் பாடி யாரே.

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

மண்ணிற் கோரு கண்.

393 பக்கத் தொடர்ச்சி

ஆகாயக்கோட்டையில் அரசுபுகுந்த புன்வினைப் புஜங்கனுக்கு அத்தினம் நடந்தபோர் முடிந்த விதம் அளவிலாக் கலக்கம் விளைத்தது. நித்திரையென்பது நாடாத நயனத்தனாகி நெடுந்தூரம் நினைத்துத் தன் அமளியிற் புரண்டான். எழுந்தான். செங்கோலுக்கும் சக்கரத்திற்கும் தினவு தின்ற கைகளால், முடிதரிக்க அரிப்பெடுத்த தலையைச் சொறிந்தான். பிறகு அக் கைகளைப் பின்புறங்கோத்து முன்னும் பின்னும் உலவினான். ஏமாங்கதத்தின் படைவலியைக் கடப்பது எளியதோர் கருமம் அன்றென்பது அவனுக்கு முன்னரே தெரியும். அந்தப் பயம் இன்று செய்த சண்டையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிலைபெறுவது மாயிற்று. ஆயின் இனிச் சரபசூரனைத் துணையேற்றுத் தொங்குவதிற் பயனில்லை. நாளைப் போரிலே தோல்வியே யடைந்தால் சரபசூரனும் தானும் சேர்ந்து சிறைபற்றப் பெறுவது திண்ணம். சிங்கமுகன் ஒருகால் சரபசூரனைச் செமித்தருள்வதும் கூடும். இவன் சூழ்ந்த சதிக்குத் தண்டமோ தலையளவே யாகும். ஆதலால், எண்ணினான் புஜங்கன்: "இருளே துணையாய் இவ்விட மகன்று அருள்தான் உடைய இளவலை அடைவேன். நான் கடாரம் சென்ற காரணமும் அப்படை இங்கு வந்திட நேர்ந்த தன்மையும் சிங்கமுகன் இளவரசற்குச் சொல்லியே இருப்பான். புவனேச்வர வேந்தன் என்னை முன்னர்ப் போகவிடாது தன்சேனையுடன் சேர்த்துப் போக்கிய உண்மையை யான் மொழிவேன். அல்லாது, சரபசூரன் என்னை இதுகாறும் காவல் கொண்டிருந்தா னென்றும், இவ்விரவு செவ்வி நோக்கி அக் காவல்கடந்து வந்துவிட்டே னென்றும் கூறினால் அவ்வுரையை வாசவன் மெய்யெனவே கொள்வான். யானுரைப்பதற்கும் உண்மையில் நிகழ்ந்ததற்கும் இடைகிடந்த வேறுபாடு அச்சிறுவன் அறிவதெங்ஙனம்?" சிந்தனை இந்தவிதமாகிப் புஜங்கன் தன் கூடாரத்திற்கு வெளியில் வந்தான். ஆனால் சூறுவளி சுழியிட்ட அவன் மனத்தில் வேறொரு காற்று மாறாகி அடித்தது, "சண்டையிற் சயமும் நாளைக்குச் சரபசூரனே பெற்றானாகில், அம்மம்ம, என் கதி என்னாம்! நட்டவற்கும் விட்டவற்கும் இருவர்க்கும் தீயனே ஆவேன். இருதிறப் போர்த்தலைவரும் முடிவினில் ஒன்றாகி, 'வஞ்சன் வஞ்சன்' என்றென்னை ஒறுப்பர். அன்றியும், இந்தச் சரபசூரனுக்கு உற்ற வெற்றியின் ஆக்கத்தையும் இழந்தவனாவே னன்றோ!" என்றிவன் அள்ளல்வாய் விழுந்தவொரு கழுதை மாறிமாறிக் காலழுந்தி உழல்வதுபோல் தெருமரல் எய்தலுற்றான். இப்படி இவன் மிதித்துக் குழப்பிய சேற்றில் குமுழியொன்று கிளம்பியது.

வேதபுரியைப் புஜங்கனுக்கு அரசிருக்கையாகச் சிங்கமுகன் நிருமித்த காலத்தில் அந்நகர்க்குக் காப்புப்படையொன்று அனுப்பி வைத்திருந்தான். போர் நிகழ்ந்த இடத்திற்கு அப்புரி நெருங்கியே இருந்ததால் பொழுது புலருமுன் அங்கடைந்து அப்படைக்குத் தலைமைபூண்டு மறுநாள் சமரபூமியுள் அதனைச் செலுத்தி வருவதெனப் புஜங்கன் துணியலானான். இந்தத் துணைப்படையுடன் வந்து எவர்பக்கம் சேர்வதென்று அவன் இன்னும் நிச்சயம் செய்யவில்லை. சுவர்மேல் இருந்த பூனையாய்ச் சிலநேரம் பொறுத்துப் பார்த்து, யார் கை நிமிர்கின்றதோ அவர்பக்கமே தானும் தன் படையும் உதவிபுரிந்து, வெற்றியின் பலனிற்கு உரிமை பாராட்டுவதென இச் சூழ்வினையோன்தன் நுண்மதி துணிந்தது. "புஜங்கா, உன் புத்திக்கு அவதி யில்லையடா! நஷ்டத்திற்கு ஆளாகாமல் இலாபத்திற்கே பாத்திரமாகும் இந்தத் தந்திரமே தந்திரம்! இத்துணையளவு கூரிய அறிவுவாய்ந்த உனக்கு எந்தப் பதவிதான் தக்கதாகாது! சிறிதே

K-C-R-700 22-8-

தேவியிவள் கற்புக்குஞ் செங்கோன் முறைமைக்கும்
பூவுலகி லொப்பாயார் போதுவார்—காவலனே [ருன்
மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்ளென்
முற்றன்பாற் பாரளிப்பான் முன். 77

பதவுரை.

முற்று - முதிர்ந்த
அன்பால் - அன்பினால்
பார் - இராஜ்யத்தை
அளிப்பான் - காக்கின்ற நளராஜனுக்கு
முன் - முன்னே, (கலிபுருடன் தோன்றி)
“காவலனே - அரசனே,
தேவி - உன் மனைவியாகிய
இவள் - இந்தத் தமயந்தியின்
கற்புக்கும் - கற்பினுக்கும்,
செங்கோல் - (உன்னுடைய) அரசாட்சியின்
முறைமைக்கும் - நீதிக்கும்
பூ உலகில் - இந்தப் பூமியில்
ஒப்பா - ஒப்பாக
யார் - யாவர்
போதுவார் - வருவார்;
என்பால் - என்னிடத்தில்
வேண்டும் - உனக்கு வேண்டிய
வரம் - வரத்தினை
கேட்டுக்கொள் - கேட்டுப் பெற்றுக்கொள்
என்முன் - என்று கூறினன்.

விரிவுரை:—இவ்வளவு மேன்மை பொருந்திய கணவனையும் மனைவியையும் பிரித்துவைத்துப் பலவாறு வருத்தியதற்குக் கலிபுருடன் கழிவிரக்கங்கொண்டு, அதனிற்கு ஈடு செய்யும்பொருட்டுத் தான் வேண்டிய வரத்தைத் தருவதாக வாக்களிக்கின்றான். நளனுடைய பெருந்தகைமையை அவன் கேட்கின்ற வரத்திலே சிறக்கக் காணலாம்.

உன்சரிதஞ் செல்ல வுலகாளுங் காலத்தும்
மின்சொரியும் வேலாய் மிகவிரும்பி—என்சரிதம்
கேட்டாரை நீயடையே லென்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து. 78.

பதப்பிரிவு:—உன் சரிதம் செல்ல உலகு ஆளும் காலத்தும் மின் சொரியும் வேலாய் மிக விரும்பி என் சரிதம் கேட்டாரை நீ அடையேல் என்றான் கிளர் மணி பூண் வாள் தானை மன்னன் மதித்து.

அன்வயம்:—கிளர் மணிப்பூண் வாள்தானை மன்னன், மதித்து, “மின் சொரியும் வேலாய், உன்சரிதம் செல்ல உலகு ஆளும் காலத்தும், என் சரிதம் மிகவிரும்பிக் கேட்டாரை நீ அடையேல்” என்றான்.

பதவுரை

கிளர் - பிரகாசிக்கின்ற
மணி - இரத்தினங்களிழைத்த
பூண் - பூண்களையுடைய
வாள் - வாள்களை ஏந்திய
தானை - சைனியத்தையுடைய
மன்னன் - நளராஜன்,
மதித்து - நன்கு ஆலோசித்து,
“மின் - பிரகாசத்தை
சொரியும் - வீசுகின்ற
வேலாய் - வேலாயுதத்தை ஏந்திய கலிபுருடனே,
உன் - உன்னுடைய
சரிதம் - அதிகாரம்
செல்ல - நடக்க
உலகு - உலகத்தை
ஆளும் - ஆள்கின்ற
காலத்தும் - காலத்திலும்
(அதாவது, கலிகாலத்திலுங் கூட)
என் - என்னுடைய
சரிதம் - சரித்திரத்தை
மிக - மிகுதியாக
விரும்பி - விரும்பி
கேட்டாரை - கேட்டவர்களை
நீ - நீ
அடையேல் - (துன்புறுத்தச்) சேராதே”
என்முன் - என்று கேட்டுக்கொண்டான்.

விரிவுரை:—உத்தமரில் நளனைப்பான் பூவுலகிலும் தேவலோகத்திலும் காண்பது அருமை என்பதற்கு இங்கு இவன் கேட்டுக்கொண்ட வரம் ஒன்றே போதும். “இத்துணைத் துன்பம் என்னை நீ செய்தனையே, கலியே, அதற்கெல்லாம் ஈடாக நானும், என் மனைவியும் மக்களும் மற்றெனக்கு உற்றவராயிருப்போரும், வறுமை பிணி மூப்பு இறப்பு என்பன யாவுமின்றி இருக்குமாறு அருள்வாய்” எனக் கேட்டிலன் நளன். “புவனம் மூன்றும் என் திகிரி செல்ல வரம் அருள்” என்றிலன். “என் வழி வரு பின்னையோரும், துன்பத்தைக் காணுவகை பணித்தருள்” என்றும் கேட்டானல்லன். வள்ளலாகையால் தன்னைப்பற்றி எள்ளளவேனும் நினைக்கவில்லை. பிறருடைய இன்பத்தைக்கண்டு அழுக்காறும், அவருடைய துன்பத்தைக்கண்டு சந்தோஷமும் அடைவார் அதமர். மற்றவரைப்பற்றி நினையாமல் தம்முடைய இன்பத்தில் திருப்தியும், துன்பத்தில் வருத்தமும் அடைவார் மத்திமர். தம்முடைய சுகதுக்கங்களில் சிந்தனையைப் பெரிது செலுத்தாமல், தாம் இன்புறுவதைப் பிறரும் இன்புற வேண்டுமென்ற எண்ணமும், தாமுற்ற துன்பம்போல் பிறர் உறாமல் வாழவேண்டுமென்ற முயற்சியும் உடையவர்களே உத்தமர்களாவார். ஆயின், உத்தமரில் இந்நளனை ஒப்பார் யாருளர்! தனக்குற்ற மாபெருந் துயரம் அன்று நீங்கிற்றே என்ற விடாயும் ஆற்றிக்கொள்ளாமல், “என்னைப் பற்றி இவ்வண்ணம் துன்பம் செய்த இக்கலி, மற்றவரைப் பிடிக்கப் புகுந்தால் என்னதான் பாடுபடுத்தானோ” என்று ஏங்குவதே அவன் முதற் கருத்தாயிற்று. அதுவும், இனிவரும் கலிகாலத்தில் இவனது ஆட்சி பின்னும் வன்மையதாய் இருக்கும். தான் தமர் தன்னினம் தன்னொடு தன் காலம் என்ற வரையறை மெய்யன்புடையோர்க்கில்லையாதலால், வேறோர் யுகத்திற்கும் நல்வாழ்வு வாழுமொரு வழியை இன்றே கேட்டு நாட்டினான் நளன். நளனுடைய சரித்திரத்தைப் புகழேந்தியின் வாய்வழி கேட்டவர், கலையுணர்வுபெற்று எல்லா நலங்களுக்கும் உரியவராவர் என்பதற்கு ஐயமில்லை. அதுவும் விரும்பிக் கேட்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் நளவெண்பாவைப் பாடமாய் வைக்கின்றார்களெனினும், மாணவர்களிற் பெரும்பகுதியோர் விரும்பிக் கேட்கின்றதில்லை என்பது பிரசித்தம். கேட்பாராயின் நளவேந்தன் நமக்காகக் வாங்கிவைத்திருக்கின்ற வரம் இவ்வளவு வீண்போகாது.

ஓலமிடலாயினான். பின்புறம் பற்றிய அந்த ஆள், “ஊளன் இவன் யாரடா!” என்று சாபாலனது எலும்பெலாம் கட்டுடைய அவனைக் குலுக்கித்திருப்பி முகத்தைப்பார்க்கக் கொல்லென்று சிரித்து, “அடே! அக்காக்கைப் புராணம் கத்திவந்த கழுதையடா இது!” என, அவனோடு போந்த மற்ற ஆள், கீழே எரிந்த சுவடியை நோக்கி, “அன்றைக்கே புவனேச்வரனிடத்தில் சுடுகூலி பெற்றிருந்தும் இத்தனைநாள் அழுகவைத்து இன்றைக்குத்தான் கொளுத்தி இருக்கின்றான்,” என்று அக்கதிபற்ற புலவன் கன்னத்தில் அறைந்தான். கடார மன்னவனது தலைவாயில் காத்தவீரர் இவ்விருவரும் என்பது சாபாலனுக்கு அவர் மொழியினால் தெரியவந்ததும், பேயே தன்னைப் பிடித்திருப்பினும் பிழைக்கலாம் மற்று, இக்கொடியவர்தம் கையினின்றுந் தப்புவதோ இல்லையெனும் அச்சம் அவனுக்கு அதிகமாயிற்று. தரையிற் கிடந்த புஜங்கனது மனமும் அவ்வாறே துடித்தது.

என் செய்வான்,இவ் வேழைக்கவி!பரணிதான் தீக்கு இரையாயினதென்றால் தானும் இத்தீயர்க்கு இரையாவதோ வென்று கலங்கினான். உதடுபதறப் பல்லிடற நாக்குழற, “ஐயன்மீர், தொழுகின்றேன். என்னைக் கொல்லன்மின். ஒருவருக்கும் தீங்கெண்ணி நான்இங்கு வந்திலேன். பரணியொன்று பாடவேண்டுமெனும் ஆசையால் வெங்களம் குறுக, இச்சவம் வாய்பிளந்தது கண்டு வெருவினேன். நீவிரே பாருங்கள். இந்தப் பிணம்...........” என்று சாபாலன் சொல்லிவருகையில் புஜங்கன், அவனது கால்களிலொன்றைத் தன் கைக்கத்தியால் வெட்டிவிடச், தனது செய்யுளைப் போலவே அப்புலவன் அடிசிதைந்து கீழே விழுந்தான். விழுந்துபோன கவியை எடுக்க முயன்ற காவலாளர் புஜங்கனைக் கண்டனர். ‘பிணமுமல்லன் காண்,’என்று சாபாலனொடுபுஜங்கனையும் தூக்கி நிறுத்தினர். பாதி மீசை பொசுங்கியும் குழிக்கண் கொப்புளித்த குருதி பூசியு மிருந்ததால் புஜங்கனது உருஇவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அவன் கையிருந்த கத்தியில் பச்சையிரத்தம் படிந்திருந்ததும் சாபாலனது காலிலொன்று துணிந்து போனதும் கருதி, “ஏ, துஷ்டா, ஏனிக்காரியம் செய்தாய். இவனெழுதிய காக்கைப் புராணமும் கொளுந்திப்போனபின் இவனால் யாருக்கு என்ன இடையூறு விளையக்கூடும்.........” என்று ஒரு சேவகன் உரப்பினான். புஜங்கனோ முகத்தில் சுட்ட புண்ணும் கண்ணிலே பட்ட புண்ணும் விளைத்த நோய்க்கு ஆற்றாது குமுறினானேயன்றி உத்தரம் பேசவில்லை. “ஐய, யாவன் நீ? எத்திறத்தான். இந்தப் படுகளத்தில் நள்ளிரவில் உனக்கிருந்த வேலை என்னவோ! உன் கண்ணுங்கூடப் பகல் நடந்த போரிலே போனதாகத் தோன்றவில்லை. யார் நீ? உண்மையைச் சொல்,” என்று மற்ற ஆள் கத்தியின் பக்கத்தால் புஜங்கனையடித்துக் கேட்டான் பதிலுரைக்காது புஜங்கன் துவண்டு சோர்வதுகண்டு, “உன்மத்தனோ இவன்” என, மற்றவன், “இந்த வாள்வேலை காட்டியிரானையின் உன்மத்தன் என்று எண்ணலாம்; இவன் பகைவரைச் சார்ந்த ஒற்றனா யிருத்தல் வேண்டும். பற்றிக்கொண்டுபோய்ச் சரபசூரன்முன் வைப்போம்,” என்றனன். தனக்குத் தீங்கு செய்ய நினைத்திலர் இவ்வாட்கள் என அவர் பேச்சினால் தேறிய சாபாலன், “காலற்ற என்னை இவ் விளாகத்துள் தனிவிட்டுச் செல்வீரோ, தலைவர்காள்,” என்று வேண்ட, ஒருவன், “இம் முடவனை எப்படி அழைத்துப் போவது” என்னலும், இன்னொருவன், “இவன்காலை யொடித்தவனே தூக்கிவருவான்,” என்று சாபாலனைப் புஜங்கனது முதுகில் ஏற்றிவைக்கப் புஜங்கனும் சிறிதேனும் பிணங்காது அக் கவிப்பொதியைச் சுமந்து தள்ளாடித் தள்ளாடி அவ்விரு ஆட்களும் உந்த நடந்தான். வெங்கண் விதிதானும் விழைந்ததொரு விளையாட்டோ இது!

மாறன் பாப் பாவினம்.

[390 பக்கத் தொடர்ச்சி]

இனி வண்ணகமென்ப தாரகமென வுரைத்தவவ் வுறுப்புடையன. வண்ண வொத்தாழிசை யெனவுஞ் சொல்வர், வண்ணித்துப் புகழ்தலால் வண்ணகமாயிற் றென்ப துணராதே; அன்றியும், எல்லாவாசிரியருஞ் செய்த வழிநூற்குத் தொல்காப்பிய முதனூலாதலி னவரோடு மாறுகொளக்கூறலா மது. ஆதலாலது தொல்காப்பிய நோக்க மன்றென வுணர்க. அதற்குச் செய்யுள் வருமாறு :—

தரவு.

பூமாது நிழன்மணிப்பூண் பொதியவிழ்பொன்
னிதழ்ப்புனிதத்
தேமாலை நறுங்களபஞ் செறிமார்பத்
திடைமுயங்க
வளப்பரிதாம் பகிரண்டத் தப்புறமு
மகத்தடக்கி
யுலப்பிலிளங் கதிருதையத் தொளிகிளர்பே
ருருவாயு
நன்னரங்கத் தணுக்கடொறு நயந்தணுவா
கியுமெழில்கூர்
தென்னரங்கத் தரவணைமேற் றெளிந்திருகண்
வளர்ந்துளாய்.

இஃ தாறடித் தரவு.

தாழிசை.

(1) ஒருசுடராஞ் சொரூபமுட னுருபமைந்
தொருசுடரோ
டிருசுடராய்க் குணமொருமூன் றெனலாகி
முறைமுறையே
படைப்பதையு மழிப்பதையும் புறம்போக்கிப்
பழிபிறங்கா
திடைப்படுகா வலைநினதென் றெடுத்ததெவ
னருளுதியே.

(2) நின்றனவா யியங்கினவாய் நீடியபல்
லுருவளித்தோன்
பொன்றியநா ளெழுந்தபெரும் புனற்படிந்த
வுயிர்களைநீ
யெம்மானே திருவுதரத் திருத்தியகா
வற்கவற்றாற்
கைம்மாறங் கெவனோமுன் கைக்கொண்ட
தருளுதியே.

னும் புந்தியில்லாதவர் எத்தனைபேர் சிங்காதனத்தில் கிடக்கின்றனர். மதியிலா மாந்தர்க்குத்தான் நற்காலம் இக்கலிகாலம் போலும்! ஆயினும், ஏ புஜங்கா வேதபுரிக்கு அரசனென இன்னும் ஆயினாய்!'' என்று தன்னையே வியந்து அவன் கடாரப்படை துஞ்சிய பாசறை விட்டுக் கரந்து போயினன்.

இன்னவாறு, வேதபுரி கருதி வழிக்கொண்ட அக்கபடன், களத்திடையிற் கவிபாடிநின்ற சாபாலன் இருந்தவிடத்தைக் கடந்தே போகவேண்டியதாயிற்று. வேறுவழி சென்றால் ஒற்றரும் காவலாளரும் தன்னைக் கண்ணுற நேரிடும். எனவே, கைக்குறை தலைக்குறை காற்குறைப் பிணங்களை இடறிக் களத்தாடே இக்கள்வன் ஏகினான். ஏகுங்காலை, தீவர்த்தி யாடிய தோற்றத்தோடு ஒருருவம் அசைவதும் நிற்பதுமாய் எதிர்முகம் நடப்பது கண்டு அச்சங்கொண்டு வேறுநெறி மாறிப்போக நினைத்துத் திரும்புமளவில், தன்பின் இருவர் பேசுங் குரல் இவன் செவிக்கு எட்டியது. காவலாளரே தன்னைப் பற்றத் தொடர்ந்தனர் என்று வெருவினான். முன்னும் போவதற்கில்லை, பின்னும் போவதற்கில்லை. இந்நிலையின் அகப்பட்டு விலகும்வழி காணாது திகைத்த அப் புஜங்கனது தோற்றம் தூரத்திலிருந்த சாபாலன் கண்களில் பட்டது. அந்தச் சமயம், சாபாலன் யுத்தத்தில் மாய்ந்து கிடந்தவர்தம் காட்சியை வரைந்து முடித்திருந்தான். ஆனால், களத்தில் கூளிக்கணம் துணங்கைகொட்டக் கவந்தங்கள் கூத்தாடுமென்று அவனுக்குக் கேள்வியுண்டு. எனவே, பேய்களுக்கும் கவந்தங்களுக்கும் அவ் வெங்களத்தில் தேடித்தேடி யலைந்தான். எங்கும் காண்கிலன். பார்க்காத தொன்றையும் அவனுக்கு எழுத முடியாதாகையால் கோபம் எய்திக், 'கூளிகளை மேய்த்துக்கொண்டு ஏனிந்தக் காளியும் களத்திற்கு வரவில்லை. என் பரணி குறைவுற்று நிற்கின்றதே. தூர்க்கைக்கு இத்தனைச் சோம்பல் எங்கிருந்து புகுந்தது. கவிச்சக்ரவர்த்தியாம் எனது சீற்றம் அறியாள் போலும். இதோ சபித்து அவளைத் தொலைக்கிறேன் பார்......'' என்று சாபாலன் மோடிக்குச் சாபமிட நிமிர்கையில், அலமந்து நின்ற புஜங்கனது படிவத்தைக் கவந்தமேதான் ஆடுகின்றதென மதித்துக், 'காளியும் என் கோபத்திற்கு வெருவினள். நான் வைய நினைக்காதிருந்தால் இந்தக் கவந்தத்தை ஆடவைத் திருப்பாளோதான்!'' என்று தனதாற்றலை வியந்தனனாகிப், புஜங்கன் இருந்த இடம் நோக்கி விரைந்து நடந்தான். கொள்ளியேந்தி ஒருருவம் தன்முகம் விரைதல் கண்ட புஜங்கன், "மறுபடி வந்ததோ எனக்கோர் இடையூறு!'' எனப் பெரிதும் வருந்தி, வாரியுள்பட்ட கயம்போல் தியங்கிப், பின் ஒருவாறு தெளிந்து எதிர்வருமவனை வாளினால் துணித்து முன்னேகச் சிந்தித்தான். இதற்குள், பின்புறம் வந்தவர் பேச்சொலி நெருங்கிக் கேட்டது. 'முன்னே வருபவனுடன் பூசல் விளைத்தால் பின்னே வருபவர் வந்து தன்னைப் பிடித்துவிட நேரும்' என்பதையுன்னி முன்கொண்ட கருத்தை யொழித்தான். அச்சமயம் சாபாலன்,

> **செத்தவர்க்குயிரிலை செப்புங்காலை**
> **மெத்தவே வேலினும் வாளினாலும்**
> **குத்திட வந்தவிக் கோக்களுக்கு**
> **அத்தமில்லை யெனற்கைய முண்டோ.**

[இச்செய்யுளின் பொருள்:—செத்தவர்க்கு=செத்துக் கிடக்கின்றவர்களுக்கு, உயிர் இலை=உயிர் இல்லை. செப்புங்காலை=சொல்லுமிடத்து, வேலினும் = வேல்களாலும், வாளினாலும் = வாள்களாலும், மெத்தவே=மிகுதியாக, குத்திட=யுத்தத்திலே குத்துவதற்காக, வந்த=இக்களத்திற்கு வந்த, இ கோக்களுக்கு=இந்த அரசர்களுக்கு, அத்தம்=கைகள், இல்லை எனற்கு=இல்லை என்று உரைப்பதற்கு, ஐயம்=சந்தேகம், உண்டோ=இருக்கின்றதோ!]

என்று தான் கடையில் ஆக்கிய பரணிச் செய்யுளை மனனம் செய்தவனாய், அதுவரையில் எழுதி முடித்திருந்த ஏட்டுக் கட்டுகளைத் தன் தலையில் ஏற்றிவிட்டு எழுத்தாணியைப் பாதத்தில் தீட்டிப் புதுவோலையும் துடைத்துக்கொண்டு, கவந்தமென் றெண்ணிய புஜங்கனுக்குப் பத்தடி சமீபத்தில் வந்துசேரவே, புஜங்கனும் எதிர்வருமவனது பார்வையிலிருந்து விலகப் பிறிதொரு வகையறியாது சிக்கெனத் தரையிற் சாய்ந்து பிணத்தொடு பிணமாய்க் கிடக்கலாயினான். புலவனோ தன் செய்யுளில் பொருந்திய உண்மைநவிற்சி நயத்தில் ஈடுபட்டுச் "செத்தவர்களுக்கு உயிர் இல்லை, என்றவொரு சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையைவிட உண்மை இவ்வுலகில் வேறு எது உளது! கையையே மறந்து வந்து கத்தியால் குத்த நினைந்த இப்படைஞரின் மதியீனத்தை எவ்வளவு அழகாய் எடுத்துக் காட்டியுள்ளேன். இன்ன தன்மையவாய்மைகளை நுனித்துரைக்கும் நானிருக்கப் பொய்யாமொழிப் புலவரெனும் பேர்சுமந்த மாக்களும் சிலர் இருந்த விபரீதத்தை யாரிடத் துரைப்பது!'' என்று பர்த்திர மறியாமல் புகழ்நல்கும் மாந்தரியற்கையில் வெறுப்புற்ற உள்ளம் கொதித்திருந்தானதலால், தன்முன் ஆடிய கவந்தம் மாயமாய் மறைந்தவிதம் இன்னதென்று தேர்ந்திலன். நான்குபக்கமும் சுழன்று தேடினான். கண்ணிற் கெட்டிய கவந்தம் தன் கைபேட்டிற்கு எட்டவில்லையே என்று துயர்கூர்ந்தான். தன்னை இவ்வாறு படுமோசம் செய்த காளியின்மீது அவனுக்குக் கோபம் உண்டாயிற்று. பற்களைக் கடித்தான். பாதத்தைப் புவியின்மேல் உதைத்தான். உதைத்து, வெறுப்பொடுகூடிய சினத்தினால் கையிருந்த எழுத்தாணியை ஓங்கித் தரையில் விட்டெறிந்தான். எறிந்த அவ்வாணியோ நேராகப் பாய்ந்து புஜங்கனது கண்ணிலே தைத்துத் தங்கியது. வலியைத் தாங்குதல் அரிதெனினும் புஜங்கன் வாய்விட்டுக் கதறவும் அஞ்சி வேதனையும் தானுமாய்த் தழுவி நடுங்கினான். சாபாலனும் சினம் சிறிது ஆறித் துறந்த தன் எழுத்தாணியைத் தேடி, அதுவிழுந்த இடத்திற்கருகே தரையிற் குனிந்து பார்த்துப், 'பிணத்திலாழ்ந்தது' என்று கூறினனாய் அவ்வாணியைவாங்கப் புஜங்கன் நோய் பொறுக்காமல் வாயைப் பிளக்கவே, முன் காளியையும் வெருட்டிய இக்கவிச்சூரன் கால் உதறிக் கையுதற நாவறண்டு நடுக்கமுற்றான். இந்நடுக்கத்தால் அவன் கையெரிந்த சுடர் ஓலைக்கட்டில் பற்றிப் புஜங்கனது முகத்தின்மேல் விழுந்தது. புஜங்கன் 'கோ'வென்று அலறினான். சாபாலனும் கதறிக்கொண்டோடிவிட எத்தனம் செய்கையில், பின்னிருந்து ஒருகை அவன் கழுத்தைப் பற்றியதுணர்ந்து, "ஐயையோ, செத்தேனே, போனேனே! காளியம்மையே கும்பிடுகின்றேன். உன்னை யான் வைதவசை இந்தமுறை பொறுத்திடுவாய். கவிமாலை கட்டு கட்டாய்ச் சாற்றித் தொழுவேன். ஐயையோ, செத்தேனே, போனேனே, நிகரில்லாக்கவி யான்பேய்வாய்க்குள் நுழைந்திடவோ! ஐயைபோ!'' என்று தனக்கே ஒப்பாரிபாடி

தொழுததன் வாசந் துற்றியும் மவ்வேட்டைச்
செறிப்பதே சென்னி மற்றைய
பொறித்தலை யென்னப் புனைபொய்த் தலையே.

இது, தாவின்றாகித் தாழிசைபெற்ற கொச்சக வொருபோகு. என்னை? "ஒருபோ கியற்கையு மிருவகை யாகும்". "கொச்சக வொருபோ கம்போதரங்கமென் றெப்ப நாடியுணர்தல் வேண்டும்" "தாவின்றாகித் தாழிசை பெற்றும், தாழிசையின்றித் தாவுடைத்தாகியும், எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியு மடக்கியலின்றி யடிநிமிர்ந் தொழுகியும் யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது, கொச்சக வொருபோ காகுமெனன்ப.'' என்பவற்றாலுணர்க. இது தனிச்சொல்லுஞ் சுரிதகமுமின்றித் தாழிசை தாமேயும் வரும். 5

தரவு கொச்சகம்

புண்டரிக மடலவிழ்பொற் பொகுட்டினில்வாழ்
திருமகளுந்
தெண்டிரைசூழ் புவிமகளுந் திருத்தகவாழ்ந்
தெழில்பெருகும்
வண்டிமிழ்பூம் புனற்பொன்னி மதிளரங்கன்
திருவடியுட்
கொண்டவர்க ளினிப்பிறவிக்
கருக்குழியுட் குறுகாரே.

இது, தனிச்சொல்லுஞ் சுரிதகமுமின்றித் தன்றளையான் வந்த தாழிசையுமின்றித் தாவுடைத்தாய கொச்சக வொருபோகு. திணை-பாடாண். துறை-கடவுள் வாழ்த்து அலங்காரம்-வாழ்த்து. இதற்கு யாப்பருங்கலக் காரிகையார் தரவு கொச்சகமென்று பெயர் கூறுப. 6

தாவிணைக் கொச்சக வொருபோகு.

(1)மாந்தளிர்போன் மேனி மையுண் கருங்கயற்கட்
பாந்தளின் மேதக்க பைபோன் றகவல்குல்
வாய்ந்தபணை மென்றோண் மடவர னல்லா
யழுங்கனுஞ் சீறாஉ ரகன்மலைக் கெம்மூர்ச்
செழும்பசும் பொன்கோடு செய்துயர் குன்றந்
திணிதாய்ப் புடைத்தெழுநின் றெண்ணித் திலக்கா
ழணிபூண் முலைபோன் றணித்து.

(2)தேமகிழ் மாலிகைச் செம்மலின் சென்னியும்
பூமகள் காதலன் பொற்றாட் கமலமும்
போன்றணித் தன்றியும் பொய்தீர் வசிட்டனும்
வான்றனில் வைகும் வடமீ னெனலாந்
திருந்திய கற்புடைச் சேயிழை யென்னு
மருந்ததி யும்போன் றணித்து.

இது, தாழிசையின்றித் தாழிசை மெட்டுபட்ட தாவிலக்கணந் திரிந்துவந்த, தாவிணை கொச்சக வொருபோகு. என்னை? "எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே. வெண்பா வியலினும் பண்புறமுடியும்" என்னுஞ் சூத்திரங்களுடன் மாறுபடாது "எழுத்து முதலா வீண்டிய வடியிற் குறித்த பொருளை முடிய நாட்டுத் தாவு தாவிணை வந்து, அதன் பின்ன ரீற்றயலடி மூச்சீரா யெழுசீரா யிறு நேரிசை யாசிரியச் சுரிதகமாதல், ஈற்றடி முச்சீரா யீற்றயலடி நாற்சீராய் மேனின்று மெழுசீரா னின்றும் வெள்ளைச் சுரிதகமாதலின்றி, வெண்டளைதட்டு வெள்ளோசை தழீஇ வெண்பாவியலாற் றாவிரண்டு மீற்றடிக்கண் முச்சீரா னிற்றமையானென்றுணர்க.

இதற்கு இங்ஙனந் தாவிரட்டியதே பெரும்பான்மையென்றுணர்க. தாவிரட்டியாது வருவது வந்தவழிக் கண்டுகொள்க. "செவ்விய திவ்விய" வென்னும் பாலைக்கலியுமிதுவென் றறிக. இது, பகுதி—இயற்கை. துறை-இடமணித்துக்கூறி வற்புறுத்தல். அலங்காரம்-ஒரு பொருளுக்குப் பல பொருளுவமை. 7

தமிழ்ப் பாடம் 73.

[நளவெண்பா.]

(394 பக்கத் தொடர்ச்சி)

கலி நீங்கு காண்டம்.

தன்னுடைய முன்வடிவம் பெற்றுநின்ற நளனைத்
தேவர்கள் பாராட்டுவதும், கலிபுருடன்தோன்றி அவனுக்கு வரமளிப்பதும் இனிவரும் நான்கு செய்யுள்களில் அடங்கி யிருக்கின்றன.

உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரிலை [தின்
இத்தலத்தி லென்றிமையோரெம்மருங்கும்-கைத்தலத்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேல்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. 76

பதப்பிரிவு:— உத்தமரில் மற்று இவனை ஒப்பார் ஒருவர் இலை இ தலத்தில் என்று இமையோர் எமருங்கும் கை தலத்தின் தேன் மாரி பெய்யும் திரு மலர் தார் வேந்தன் மேல் பூ மாரி பெய்தார் புகழ்ந்து.

அன்வயம்:—இமையோர், "உத்தமரில் இவனை ஒப்பார் ஒருவர் இத்தலத்தில் இலை" என்று புகழ்ந்து தேன்மாரி பெய்யும் திருமலர்த்தார்வேந்தன்மேல் எம்மருங்கும் கைத்தலத்தின் பூமாரி பெய்தார். (மற்று - அசை)

பதவுரை.

இமையோர் - தேவர்கள்,
"உத்தமரில் - மேன்மக்களில்
இவனை - இவனை
ஒப்பார் - போன்றவர்
ஒருவர் - ஒருவரும்
இ - இந்த
தலத்தில் - இடத்தில்
இலை - இல்லை"
என்று - என்று
புகழ்ந்து - புகழ்ந்து
தேன் - தேனாகிய
மாரி - மழையை
பெய்யும் - சொரிகின்ற
திரு - அழகிய
மலர் - மலர்களாலாகிய
தார் - மாலையை அணிந்த
வேந்தன்மேல் - அரசன்மீது,
கைத்தலத்தின் - தம் கைகளால்
எம்மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும்
பூமாரி - மலர் மழையை
பெய்தார் - பொழிந்தார்.

குறிப்புரை:—"இத்தலத்தில் ஒப்பார் ஒருவர் இல்லை'' என்றது, பூலோகத்தில் ஒருவர் இல்லை என்று பொருள்படுவதோடு, 'இத்தலத்திலும்' என உயர்வுசிறப்பும்மை தொக்கு இருப்பதாகக் கருதினால் "தேவலோகத்திலுங்கூட இவனைப்போன்ற உத்தமர் இல்லை'' என்றும் அர்த்தம் ஆகலாம்.

யுமன்றோ. அவ்வருள்நிலையும் அழகியதன்றோ? உலகம் விரிந்த நிலையில் அவ்வுலகம், தனது ஒப்பற்ற தனிமுதலை எவ்வாறு வணங்கவேண்டும் என்பதனை மலரும்போதே மாலின்மேல் மால்கொண்டு வணங்கி வாழ்த்தும் நான்முகன் நானிலமறிய நன்கு காட்டுவதனை நான் காண்பது எந்நாளோ? பெம்மான்! என் அம்மான்! என் அம்மான்! இன்னருள் இருந்தவாறென்னே! பொன்னிற் சிறந்த செம்பொன்னேபோல் என்னால் என்றும் விரும்புதற் குரியன்; எய்ப்பினில் வைப்பு. அவனைக் காணும் பேறொன் றில்லேன். அப்பேற்றினைப் பெற்றாரில் அம்மலரவனே முதல்வன் அன்றோ? பிறவாது பிறந்த மலரவன் மாண்பினை என்னென்பது. எம்மான் புகழினை ஒவ்வொன்றாக எடுத்தேத்த ஒருநாவுபோதியதோ? நான்முகனுக்கு நான்கு நாவுண்மையும் அவனது மாண்பே. அவனது பெரும்பேறே. ஆண்டவன் எதிரே ஒருபால், ஒருமுகத்தோடு நில்லாது நாற்பாலும் அரங்கனது அழகினை நன்கு கண்டு நாவாற் பாட அவனுக்கு நான்கு நாவோடு நான்குமுகமும் அமைந்த மாண்பே மாண்பு. பிறந்ததும் பெருமானைக்காணும் பெரும்பேறு பெற்ற அப்பெரியானது பெருங்கண்களே பேரழகுடைய கண்கள்; அல்லும் பகலும் அழகனது நிழலாடும் கண்கள். இருகண்ணால் கண்டுமுடியாத கருமணியின் கட்டழகினைக் கண்ணாரக்கண்டு களிக்கக் கண்களோ ரெட்டும் வேண்டாவோ? இறைவனது கொப்பூழ் மலரிலேயே குந்திக்கிடக்கும் பேறும் பெரும்பேறே! ஏன்? மலர்ந்ததும் அம்மானை வணங்கலாம் அன்றோ? யானோ அரசிலே இடர்ப்பட்டுச் சிறைப்பட்டேன். நம்போன்றார்க்கு வரும் இத்தகைய இடர்ப்பாடுகள் ஏதுமின்றி எந்நாளும் இறைவனை இனிதே இறைஞ்சுகின்றான். கொப்பூழ்மலரின் குளிர்ச்சியினையும், ஊற்றின்பத்தையும் உணர்ந்து துய்த்து வாய்விட்டு வாழ்த்துவான் மலரவன். நாற்பாலும் ஆண்டவனழகைக் காண்பான். கண்கவர் வனப்பு அவன் மனதையும் அடிமைகொள்ளக் கைகூப்பித் தொழுது தன்னை மறக்கின்றான்; பாடுகின்றான், கண்ணிமைத்து உள்ளத்தே ஒளிர்கின்ற ஒப்பில்லா அறிவழகினை அகக்கண்ணால் காண்கின்றான். புறக்காட்சியினும் அகக்காட்சி அழகுடைமையின் கைகூப்பி நின்றவன் தலைவணங்கிப் பேச்சற்று நிற்பான். வழிபாட்டை மறிப்பாரின்றி மால்கொண்டு மாலினைக் காண்பான். மக்களில் முதல்வனாய மலரவனும் இவ்வாறு மால்கொள நின்ற வடிவழகினன், நம்போன்றார்க்கு அருள் செய்யவேண்டியே நமக்கு அணித்தாய அரங்கத் தரவணையிற் பள்ளிகொள்கின்றான். அவ்வாறு அணுகிவந்த அம்மானை நான் அணுகி அடையும் நாள் எந்நாளோ? ஒன்றியாய் நின்று உகந்து காணும் அழகல்லவே அவனழகு. கண்டவுடன் மலரவனும் வாய்வெருவி வாழ்த்தும் அழகன்றோ அவ்வரங்கத்துளான் கட்டழகு. வாழ்த்தினால் கேட்பார் வேண்டாவா? ஆகவே அடியவரோடு உடன்கூடிச் சென்று அவனழகினைக்கண்டு அக்காட்சிஇன்பத்திற்குப் போக்குவீடாக மலரினும் மெல்லிய அவனதடியிணைக்கீழ் மிகமெல்லிய மலர்களைத்தூவிஅணுகு நாள் எந்நாளோ?”

மாவினைவாய் பிளந்துகந்த மாலை வேலை
வண்ணனைஎன் கண்ணனைவண் குன்றம் ஏந்தி
ஆவினைஅன் றுய்யக்கொண்ட ஆயர் ஏற்றை
அமரர்கள்தந் தலைவனை அந்தமிழின் இன்பப்
பாவினைஅவ் வடமொழியைப் பற்றற் றார்கள்
பயிலரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்
கோவினைநா வுறவழுத்தி என்றன் கைகள்
கொய்ம்மலர்தூய் என்றுகொலோ கூப்பு நாளே. 4

[மா-குதிரைவடிவு கொண்டு கண்ணனைக் கொல்ல வந்த கேசி என்னும் அரக்கன்; மாலை - திருமாலினை; வேலை-கடல்; ஆயர் இடையர்; ஏறு-சிங்கம்போன்றவன் அல்லது காளைமாடு போன்றவன். அவ்வடமொழியை- அழகிய வடமொழிப் பாக்களைப்போன்று அழகியவனை, அல்லது தமிழ்ப்பாக்களுக்கு இருக்கும் அழகும் இனிமையுமாகிய அத்தகைமைகளை யுடைய வடமொழிப் பாக்களைப்போன்று அழகியவனாய் இனியவனாய் இருப்பவனை; பயில்-பழகும், அதாவது என்றும் வாழும்]

“அணுகுதலும் அவனழகில் ஈடுபட்டு நாத்தழும்பேற வாழ்த்தாதிருத்தலும் இயலுமோ? அவனுயர்வினைக்கண்டு அன்போடும் ஆர்வத்தோடும் ஆய்ந்து பார்த்துக் கொய்துவந்த மலர்களைத் தூவிக் கைகூப்பி நில்லாமல் இருக்க இயலுமோ? அவனைக் காணும் போதே பகைவரைப் பதைக்கக்கொல்லும் அவனுடைய பண்பும் அவனுருவில் ததும்பி வழிகின்றதன்றோ? குதிரையின் வடிவெடுத்துவந்த கொலைஞனின் குறிப்பறிந்து அவன் வாயினைக் கிழித்துக் கொன்றெறிந்தான். இவ்வாறு செய்த பின்னும் “இந்தப் பூனையும் பால் குடிக்குமோ” என நின்று ஒன்றுமறியாதவன்போல எடுத்தார் கைப் பிள்ளையாய்த் தவழ்ந்துலாவும் மாயன். அவனே மால். கொல்லற் கரியானைக் குழவியாய் நின்று கொன்றபோது வருந்தினானோ? அஃதும் ஒரு திருவிளையாட்டாதலின் உகந்தே உலவினான். தீமையைத் தேய்க்கும் திருமாலன்றிச் சிற்றுயிர்க்கு உற்றதுணை ஏது? கொலைஞனைக் கொன்றானென்று நாம் வெருவி ஓடாதபடி அருளே உருவாகிக் கண்டோர் கண்குளிரக் காணும் கருங்கடல்போல ஒளிர்கின்றானன்றோ? அவ்வருளினை உருவளவில்காட்டிச் செயலில் காட்டாது விட்டானோ? இடையர்களது கைப்பிள்ளையாய் வளர்ந்து குன்றினைக் குடையாகக் கவித்து ஆவினைக் காத்துதவினான் அன்றோ? அவனுடைய அன்பின் எளிமை இருந்தவாறென்னே. அறிவிற் சிறியாருக்கும் இவனே அன்பன். அறிவிலா விலங்குகளுக்கும் இவனே அன்பன். அறிவிற் பெரிய கடவுளர்க்கும் இவனே அன்பன். ஆவினைக் காத்தபோது எதிர்த்து நின்றார் வானவரே அன்றோ? இவனுக் கவர்கள்தோற்று இவனையே தலைவனென் றுணர்ந்தனர். அரக்கன் மிடுக்கினை அடக்கியதுபோல வானவர் மிடுக்கையும் அடக்கியருளினான். அழகிய தமிழ்ப்பாக்களைக் கற்றறிந்துள்ளேன். வடமொழிப் பாவினையும் ஓதியுணர்ந்தேன். அவற்றிலே நான்துய்த்த இன்பத்தினை வேறெங்கும் துய்த்திலன்; துய்க்கப் போவதும் இல்லை. ஆனால் அரங்கனொருவனே அத்தகைய இன்பமாகி எமக்கு அருள்செய்பவன். அரங்கத்தரவணையிற் பள்ளிகொண்டவனிடத்தே தீமையைத்தேய்க்கும் வஞ்சகப் புன்சிரிப்பும் திருவிளையாடலிற் சென்ற மனநிலைக்கேற்ற வடிவ அமைப்பும் அருளொழுகும் திருமுகக்குறிப்பும் இன்பமே உருவானதுயினிலையின் தோற்றமும் விளங்கிப்பொலிகின்றன. இப்பெரியானது ஊரிலே மக்கள்பலர் வாழ்கின்றனர். அவர் எல்லாம் பற்றற்றவர்களே. யாதேனும் ஒன்றினை வேண்டியோ அவனைச் சுற்றி நிற்கின்றார்கள். தினவெடுத்தவன் சொறிந்துகொள்வதுபோல அவனைக் கண்டாலன்றி உயிர்வாழ முடியாதவராய் அங்கேயே அல்லும் பகலும் அமர்ந்திருந்து அவனை வாழ்த்தி வணங்கி வாழ்கின்றார்கள். அரவணையிற் பள்ளி கொள்ளும் அத்தகைய தலைவனைக் கண்டதும் கண்டபடி நாத்தழும்பேறப் பாடிப் புகழ்வதல்லால் வேறுவகையில் அக்காட்சிஇன்பத்தைப் பொறுத்திருத்தல் முடியுமோ”. (தொடரும்)

என்காலத் துன்சரிதங் கேட்டாரை யானடையேன்
மின்கா லயில்வேலாய் மெய்யென்று—நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனான் கலி. 79.

பதப்பிரிவு:—என் காலத்து உன் சரிதம் கேட்டாரை யான் அடையேன் மின் கால் அயில் வேலாய் மெய் என்று நன் காவி மட்டு இறைக்கும் சோலை வளம் நாடன் முன்நின்று கட்டுஉரைத்து போனான் கலி.

அன்வயம்.—கலி, “மின்கால் அயில் வேலாய், உன் சரிதம் கேட்டாரை யான் என்காலத்து அடையேன், மெய்”என்று கட்டுரைத்து, நன் காவி மட்டு இறைக்கும் சோலை வளம்நாடன் முன்நின்று போனான்.

பதவுரை.

கலி - கலிபுருடனானவன்,
“மின் - மின்னலைப்போல் பிரகாசத்தை
கால் - வீசுகின்ற
அயில் - கூர்மையையுடைய
வேலாய் - வேலாயுதத்தையுடைய நளனே,
உன் - உன்னுடைய
சரிதம் - சரித்திரத்தை
கேட்டாரை - கேட்டவர்களை
யான் - நான்
என்காலத்து - கலிகால மென்னும் என்னுடைய காலத்திலும்
அடையேன் - சேரேன்,
மெய் - இது நிச்சயம்”
என்று - என்று
கட்டுரைத்து - உறுதியாகக் கூறி
நன் - நல்ல
காவி - நீலோற்பலங்கள்
மட்டு - (தம்மிலிருந்து வழிகின்ற) தேனை
இறைக்கும் - பாய்ச்சுகின்ற
சோலை - சோலைகளினது
வளம் - வளப்பத்தையுடைய
நாடன் - நாட்டையுடைய நளனது
முன்நின்று - எதிரிடத்தை விட்டு நீங்கி
போனான் - போனான்.

விரிவுரை:—நளன் வேண்டிய வரத்தைக் கலியும் மகிழ்ந்து அளித்துச் சென்றான். “என் சரிதம் மிக விரும்பிக் கேட்டாரை அடையேல்” என்றான் நளன். கலி, ‘மிகவிரும்பி’ என்பதைச் சொல்லவில்லையாயினும், இவனுடைய கருத்தும் அதுவே என்று எண்ண வேண்டும். அல்லது விருப்பமில்லாமற் கேட்டவர்களையுங்கூடச் சிறிது இரக்கத்தோடு நடத்துகின்ற உத்தேசம் உடையவனாயிருப்பினும் இருக்கலாம்.

இலக்கணம்.

ஆகிய என்னும் பண்புருபு இடையே தொக்கு இருக்குமானால் அந்தத்தொகைகள் எல்லாம் பண்புத் தொகைகள் என்பதைச் சென்ற பாடத்தில் செப்பினோம். தன்மை நிறம் வடிவு அளவு சுவை முதலிய பண்பைக் குறிக்கும் பெயர்ச்சொல் நிலைமொழி யாகவும், அந்தப் பண்பை உடையவற்றைக் காட்டும் பெயர்ச்சொல் வருமொழியாகவும் அமைந்து, அவ்விரண்டிற்கும் உள்ள ஒற்றுமையை விளக்குவதற்கு அவசியமாயிருக்கின்ற ஆகிய என்னும் சொல் இடையே (வெளிப்படையாயல்லாமல்)மறைந்திருக்குமானால் அத்தொடர் பண்புத்தொகை என்னலாகின்றது.

மெய்ம்மொழி, என்றபோது, வருமொழியாகிய மொழியின் தன்மை இன்னதென்பதை மெய் என்னும் நிலைமொழி காட்டுகின்றது. ‘மெய்யாகிய மொழி’ என விரியும். இள அன்னம், முதுமொழி, போன்ற தொடர்களும் இப்படிப்பட்ட பண்புத் தொகைகள்.

கருமேகம், வெண்மல்லி, செந்தாமரை, போன்ற உதாரணங்களில் வருமொழியால் குறிக்கப்பட்ட பொருள்கள் என்ன நிறம் வாய்ந்தன என்பதை நிலைமொழிகள் குறிக்கவும், இடையே ஆகிய என்பது தொக்கு இருக்கவும் காணலாம். இவை, கருமை ஆகிய மேகம், வெண்மை யாகிய மல்லி, செம்மை யாகிய தாமரை என விரியும்.

உருண்டை உலகம், கோணல் வரி, வட்டப்பலகை, சதுரக்கல்;—இவை வடிவுப் பண்புத் தொகைகள்.

கால்பங்கு, நான்மறை, இருகுரவர், சிறு மலை,நெடு வீதி,—இவை அளவுப் பண்புத்தொகைகள்.

உவர்ப்புநீர், கைப்புக்கனி, இன் அமுது, போன்றவை சுவைப் பண்புத் தொகைகள்.

இனி, இவைகளைப்போலல்லாமல் சிறிது வேறுபட்டும் பண்புத் தொகைகள் வரலாம். இவ்வுதாரணங்க ளெல்லாம், நிலைமொழிகள் ஒரு பண்பின் பெயராகவும் வருமொழி அப்பண்பைப் பெற்றிருப்பனவற்றைக்குறிக்கின்றசொற்களாகவும் அமைந்திருக்கின்றன. அப்படிக்கில்லாமல் இரண்டு மொழிகளும் பொருட்பெயராக விருந்தும் அவைகளுக்கிடையே, ஒற்றுமையை விளக்குவதற்கு அவசியமான ஆகிய என்னுஞ் சொல் தொக்கு இருத்தலும் கூடும். வாழைமரம், சாரைப்பாம்பு, என்னும் தொடர்கள் விரிந்தால் வாழை ஆகியமரம், சாரை ஆகியபாம்பு, என விரியலாகும். வாழை, சாரை என்னும் நிலைமொழிகள் குணப்பெயர்களல்ல. அவைகளும் பொருட் பெயர்களே, மரம், பாம்பு என்னும் வருமொழிகள் பொதுப் பெயர்கள். பல மரங்களிற் சிறப்பாக ஒருவகை மரத்தைக் குறிப்பது வாழை. அப்படியே, பலவித பாம்புகளில் சிறப்பாக ஒரு வகையைக் குறிப்பது சாரை. இவ்வாறு வருமொழி பொதுப் பெயராகவும் நிலைமொழி சிறப்புப் பெயராகவும் வருங்காலையிலும் அவையிரண்டிற்குமுள்ள ஒற்றுமையைக் காட்டுவதற்கு ஆகிய என்னுஞ் சொல் அவசிய மாகின்றது. அச்சொல் மறைந்து இருப்பதால் இவைகளும் பண்புத்தொகைகளே. இப்படிப்பட்ட தொகைகளை இருபெயரொட்டுப்பண்புத் தொகைகள் என்று அழைப்பர். சிறப்புப் பெயர் பொதுப்பெயர் ஆகிய இரண்டும் சேர்ந்து வருவதால், இதற்கு இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்னும் பெயர்வந்தது.மாலைப்போது,தமிழ்ப்பாஷை, போன்றன இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள். மாலையாகியபோது, தமிழாகிய பாஷை, என அவை விரியும்.

‘பண்புத் தொகை,’ என்ற தொடரே, இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கு நல்ல உதாரணமாகும். இது பண்பு ஆகிய தொகை, என விரியு மாதலால், ‘ஆகிய’ என்பது தொக்கு இருத்தல்பற்றி அத்தொடர் பண்புத்தொகை. இனி தொக்கு இருக்கின்ற தொடர்களையெல்லாம் பொதுவாய்க் குறிக்கின்ற, தொகை என்னும் சொல் வருமொழியாயும், அத்தொகைகளில் சிறப்பாகப் பண்பு என்ற ஒன்றைக் குறிப்பது நிலைமொழியாயும் அமைந்திருத்தலால், ‘பண்புத்தொகை’ என்ற தொடரே இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆயிற்று.

(3) புறம்பயின்ற வினைவழிசார் போக்குவர
வினும்பிரியா
தறம்பயின்ற தனுவுளதே லதற்கவற்றை
யெடுத்தனையா
யுண்ணீர்மை யற்றனமாய்த் துறுநரகிற்
புரிவதுநீ இயக்
கண்ணீர்கொண் டகன்றகலாக் காவலெவ
னருளுதியே.

இவை மூன்று மொருபொருண்மேன் மூன்றடுக்கி நான்கடித்தாய் இரண்டு விகற்பத்தான் வந்த தாழிசை.

அராகம்.

(1) தரணியி லெவரொடு முரணிய பெருவிற
லிரணியன் வானெனு மரணற விதலினை
(2) ஒருபது சிரமுட னிருபது கரமுள
நிருதன துயிர்மிசை பொருகணை சிதறினை.
(3) மறையவ ரிறையல ருறைவயின் வடிவுரை
பறைபவ னுயிர்புகு மறைகழ லிணையினை.
(4) முதலையி னிடருறு மதமலை மடுவினு
ளுதவுக வெனுமுரை யதனொடு முதவினை.

இவை நான்கு மராகம். என்னை? "உருட்டு வண்ண மராகத்தொ டொக்கும்" என்பதனாற் குறி லிணைந் துருட்டி வந்த துணர்க.

அம்போதரங்கம். பேரெண்.

(1) வஞ்சனையோர் வடிவெடுத்து மாதுலனு
மறைபயின்ற
கஞ்சனைக்கொன் றரகேசன் கடும்பொறையைத்
தவிர்த்தனையே.
(2) குருகுலத்தார் நூற்றுவரைக் கூற்றுவனுட்
டினிலிருத்தித்
தருமன்முத லவர்க்கவனி தனியாளக்
கொடுத்தனையே

இவை நாற்சீ ரீரடி யிரண் டம்போதரங்கம்.
அளவெ ணம்போதரங்கம்.

(1) கழிபெருங்கற் பினளாடை கழியாம
னயந்தனையே
(2) வழிபடுந்தூ தனுமாகி மடக்கோலை
சுமந்தனையே
(3) ததிபாண்டன் றனக்கழியாத் தமனியநா
டளித்தனையே
(4) விதிகாண்டற் கெண்ணிலபல் வேடமவை
கொண்டனையே.

இவை நான்கு நாற்சீ ரோரடி யம்போதரங்கம். அளவெண்; அற்றேல், நாற்சீ ரடியிரண் டம்போதரங்கத் தோடு மிவற்றிடை வேற்றுமை யாதோவெனின் "எழுத்து முதலாவீண்டியவடியிற் குறித்த பொருளை முடியநாட்டல்,' வேற்றுமை. என்னை? "எழுத்து முதலா வீண்டியவடியிற் குறித்தபொருளை முடிய நாட்டல், யாப்பென மொழிப யாப்பறிபுலவர்" என்பதனானுணர்க. இந்நோக்கம் மேல்வரு மிடையெண் சிற்றெண்ணிற்கு மொக்கும்.

இடையெ ணம்போதரங்கம்.

1 தாடகை யுடலுயிர் போக்கினை.
2 தாபதன் மனதிடர் நீக்கினை.
3 நீடக லிகைபழி தீர்த்தனை.
4 நேசமுள் ளவனொடு சேர்த்தனை.
5 வில்லினை மிதுலையில் வளைத்தனை.
6 மெல்லிய ளிளமுலை துளைத்தனை.
7 வல்லர வடல்கெட நடித்தனை.
8 மருதினை முதலொடு முடித்தனை.

இவையெட்டு மூச்சீரோரடி யெட் டம்போதரங்கம்.
சிற்றெ ணம்போதரங்கம்.

1 உறித்தயிர் கட்டுண்டனையே.
2 உரலிடை கட்டுண்டனையே.
3 மறித்துநிரை காத்தனையே.
4 வழங்கினையைங் காத்தனையே.
5 குடநடமுன் பாடினையே.
6 குழலினிற்பண் பாடினையே.
7 படர்சகடம் பொடித்தனையே.
8 பகட்டுமருப் பொடித்தனையே. .
9 நாவலன்பின் னடந்தனையே.
10 நடித்தனமன் னடந்தனையே.
11 கோவலரில் லிருந்தனையே.
12 களவிடையே யிறுத்தனையே.
13 புள்ளின்வா யிடந்தனையே.
14 புரந்தனையா ரிடந்தனையே.
15 தெள்ளமுதங் கடைந்தனையே.
16 தேவருளங் கடைந்தனையே.

இவை பதினாறு மிருசீ ரோரடிச் சிற்றெண்அம்போதரங்க மெனினு மெண்ணெனினு மொக்கும். இதனுள், பேரெண் ணிரண்டும், அளவெண்ணாலும், இடையெணெட்டும், சிற்றெண்பதினாறும், அடைவே குறைவின்றி வந்தன.

தனிச்சொல்.

என வாங்கு.

சுரிதகம்.

இனையதன் மையவா மெண்ணருங் குணத்தி
னினைவருங் காவ னிகழ்த்தினை யதனா
னின்னது கருணையு நீயு
மன்னிய திருவுடன் வாழிவா ழியவே.

இது, நான்கடியாய் நேரிசை யாசிரியப்பாவினா லிற்ற சுரிதகம். இதனுள், ஆறுறுப்புங் குறைவின்றி வந்தமை கண்டுகொள்க. இது, யாப்பருங்கலக் காரிகை நோக்கம். என்னை? "அவற்றொடு முடுகிய லடியுடை யராக மடுப்பது வண்ணகவொத் தாழிசையே." என்பதனாலும், "அசையடிமுன் னராகம்வந் தெல்லாவுறுப்பு முண்டேல் வசையறு வண்ணகவொத் தாழிசைக்கலி" என்பதனாலு முணர்க. இவையிரண்டும். திணை—பாடாண். துறை—முன்னது கடவுண் வணக்கம். பனுவல்வாழ்த் தெனினு மாம். பின்னது கடவுள் வாழ்த்து. இரண்டும் அலங்காரம்—வாழ்த்து. 4

கோச்சக வொருபோகு.

தாழிசை

(1) ஆளாய் மதுரகவி யாதரித்த பூங்கமலத்
தாளான் மகிழ்மாறன் றந்த தமிழ்மறைப்பாக்
கேளா தவரே யிருசெவியுங் கெட்டாரே.
(2) மாதர் முலைப்பா லருந்தா வரோதயனுந்
தாதார் மகிழ்மாறன் றந்த தமிழ்மறைப்பா
வோதா தவரே யுரையறியா வூமர்களே.
(3) புள்ளிப் பொறிவண் டிமிழ்ப்பூம் பொழிற்குருகூர்
வள்ளல் மகிழ்மாறன் வடித்த தமிழ்மறைப்பா
வுள்ளத் துணரா தவரே யுணர்விலரே.

தனிச்சொல்.
புலவீர்

சுரிதகம்

பழுதற மாறன் பகர்தமிழ் கையா
லெழுதிய வேட்டி னிமலர் சூட்டித்

படியும்,-"உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் வஞ்ச வாழ்வு எல்லாம் இன்று அழிவதைக்காண எழுந் தருளும்; இனிமேல் எமதூதர் கையில் தூங்குவீர்; ஒருநாளும் முடிவில்லா அரக்கர்வாழ்வு முடிய உன் தமையன் தீமை தேடினான். நீயும் இன்று இறத்தல் திண்ணம்" என்றுகூறிக் கையிருலசைத்து எழுப்புவ ராயினர். இதற்கும் எழுந்திராததுகண்டு அவர்கள் இராவணனிடஞ் சென்று கூறினர். கேட்ட ராவணன் ஆயிரக்கணக்கான யானை குதிரை யாளி முதலிய வற்றை ஏவி மிதிக்கவிட்டு எழுப்புங்களென்றான். அவ் வாறுசெய்தும் எழுந்திராததால் மீண்டும்வந்து கூறி னர். பிறகு மல்லர்களை ஏவி எழுப்பச் சொன்னான்.

உடனே இலக்ஷக்கணக்கான மல்லர்கள் சேனைக ளுடன் கும்பகருணன் இன்று வெற்றிகொண்டு வரு வானென் றெண்ணி அவன் மாளிகையண்டை வந்து கதவைத் திறந்தனர். அவ்வாயில் வழியே கும்பகன் னன் தூங்கும்போது உட்கொள்ளும் மூச்சுக் காற் றான சண்டமாருதத்தி லகப்பட்டனர். அக்காற்று அவர்களை முன்னுக்கும் பின்னுக்கும் வலித்தது. உடனே அவர்கள் நிலைகுலைந்து தத்தம் முழுவலியி னால் ஒருவரோ டொருவர் கைபிணைத்துக்கொண்டு அச்சுழிக் காற்றிலிருந்து தப்பிப் பிழைத்து வேறு வாயில் வழியாகத் துயிலெழுப்ப வந்தனர்.

அங்கு வந்து அவனது பிளந்த வாயையும் மூக்கை யும் கண்டு பயந்து இவனை எவ்வாறெழுப்புவதென்று யோசித்தனர். அப்பா லவனைத் தொட்டெழுப்புவ தற்கஞ்சிச் சங்கம் தாரை பூரி முதலிய சத்தக்கருவி களை அவனது பெரிய காதில் ஊதினர். பலர், கதை சம்மட்டி குந்தம் முதலியவற்றால் அவனது தாடை, சந்து மார்பு தலை முதலிய உறுப்புக்களில் வலுவாக அடித்துக் களைத்து இராவணனிடம் சென்றுரைத் தனர்.

அப்பால் குதிரைப்படைகளை விட்டெழுப்பச் சொன்னான். விரைவில் ஆயிரம் குதிரைகளைக் கொண்டுவந்து மட்டற உறங்குகின்றவன் மார்பில் மாலைபோல இடசாரி வலசாரியாகக் கால்களைக்குமட் டும் ஓட்டிநடத்தினர். இச்செயல் கும்பகர்ணனுக்குத் துயிலைத் துடைதட்டிக் கொடுப்பதுபோ லிருந்தது. அதற்கும் எழாததுகண்டு வருந்தி இராவணனிடம் சென்றுகூறி வேறுபாயஞ் சொல்லவேண்டினர். அதற் கவன்,

இடைபேரா விளையானை இணையாழி மணிநெடுந்தேர்
படைபேரா வரும்போதும் பதையாத வுடம்பானை
மடைபேராச் சூலத்தால் மழுவாட்கொண் டெறிந்தா
[லும்
புடைபேராத் துயிலானைத் துயிலெழுப்பிக் கொணர்
[கென்றான்.

இதுகேட்ட ஆயிரவரும் வணங்கி வன்றயிற் கும்ப கர்ணனிடம் வந்து அவனது இரண்டு கன்னங்களி லும் பெரிய இருப்புலக்கைகொண்டு விடாது அறைந் தனர். அவ்வாறடித்தலும் இறந்தவனெழுந்ததுபோல எழுந்து நின்றான். அப்பொழுது மூவுலகத்தாரும் மனமுட்கினர். திசையானைகள் சலிப்படைந்தன. மும் மூர்த்தி முதலிய தேவர்கள் துணுக்கமுற் றேங்கினர்.

கும்பகன்ன னெழுந்ததும் வழக்கப்படி ஊனையும் தேனையும் காணாது கடைவாய் நக்கிக்கொண்டு பசியி னால் கண்கள் சிவக்க வெகுண்டான். உடனே உண வும் நறவும் கொண்டு கொடுத்தனர். அறுநூறு வண்டிச் சோற்றையும் தின்று பதினாயிரம் குடம் கள்ளையும் குடித்தான். அப்பால் ஆயிரத்திருநூறு எருமைக் கடாக்களையும் சிற்றுண்டியாய்ச் சர்வசா சாதாரணமாய்த் தின்று மேலும் கொண்டுவாருங்க ளென்று, படுக்கையில் உட்கார்ந்தான். தன்னெதிரில் இராவணனில்லாததால் மறுபடியும் இருந்தபடியே குடித்த இரத்தம் கடைவாய் வழியே வழியத் தூங்க லாயினன்.

பக்கத்தில் நின்றவர்கள் "ஐயா! உமது தமையன் கூப்பிடுகின்றா"னென்று கூறினர். உடனே நகரத்தார் ஆரவாரிக்க விரைந்துபோய் இராவணன் கோவில் சென்று தமையனைக் கண்டு வணங்கினான். இராவ ணன் தனது வலிய துணைவனான கும்பகர்ணனைத் தனது இருபது கைகளாலும் தழுவித் தன்னருகி லிருத்திக்கொண்டான். உதிரத்தையும் நறவையும் மிகுதியாக ஊட்டிக் கடல்நுரைக்கொப்பான பட்டு வஸ்திரமுடுத்திப் பலவித ஆபரணங்களையும் பூட்டி னான். இந்திரன் இராவணனுக்குத் தோற்று ஐரா வதத்தோடு ஓடும்போது போட்டுவிட்டுப்போன ரத்தினங்களிழைத்த நெற்றிப்பட்டத்தை வீரப்பட்ட மாகக் கும்பகன்னன் நெற்றியில் கட்டினான். தெய்வ மணம் கமழும் செஞ்சந்தனத்தைப் பூசினான் பரம சிவன் கொடுத்த கவசத்தையும் அணிந்தான்.

(தொடரும்)

குலசேகரர்,

[311-வது பக்கத் தொடர்ச்சி]

திருநாளைப் போவார்

எம்மாண்பில் அயன்நான்கு நாவி னாலும்
எடுத்தேத்தி ஈரிரண்டு முகமும் கொண்டு
எம்மாடும் எழிற்கண்கள் எட்டி னாலும்
தொழுதேத்தி இனிதிறைஞ்ச நின்ற செம்பொன்
அம்மான்றன் மலர்க்கமலக் கொப்பூழ் தோன்ற
அணியரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்
அம்மான்றன் அடியிணைக்கீழ் அலர்கள் இட்டுஅங்கு
அடியவரோ டென்றுகொலோ அணுகு நாளே 3.

[அயன்-ப்ரஹ்மாவாம் படைப்புக் கடவுள்: எம்மாடும்-எல்லாப் பக்கங்களிலும்: எழில்-அழகு: இறைஞ்ச - வணங்குக: அடியிணை - இரண்டு திருவடி: அலர்-பூ]

"உலகினை ஒருவயிற் றடக்கிய உயர்ந்தோன் ஒரு தனியே அறிதுயிலமர்ந்த அறிவுநிலையின் அழகினைக் கண்டு அகநெகிழ்வ தெந்நாளோ? அஃதொன்றினைத் தானே நானிழந்து நிற்கின்றேன். அவ் வறிவுநிலை அருள்நிலையு மாதலின் அந்நிலையில் குவிந்தடங்கிய உலகம் மலர்ந்து விரிகின்றமையும் காண்கின்றிலேனே. எம்பெருமானது கொப்பூழில் மலர்ந்த தாமரைத் தண்மலர் மேலெழுந்து பல விதழையும் பரப்பிநின்று தோன்றும்போது, உலகம் விரிந்த நிலை நன்கு பொலி

கும்பகர்ணன்.

பலநாட் கழித்துத் திக்குவிஜயஞ் செய்யச்சென்ற இராவணன் அனைவரையும் வென்று இறுதியில் இந்திரனிடஞ்சென்று போர்தொடுத்தான். அப்பொழுது கும்பகருணன் துயிலெழுந்து இராவணனுக் குதவிக்காகச் சென்றான். தன் வலிய கைத்தண்டினால் அமரர்களைச் சாங்கோபாங்கமாய் அடித்து வீழ்த்தினான்.

376 பக்கத் தொடர்ச்சி.

சேனை காவல னிந்திரன் சிந்துரச் சென்னி
யானை கால்குலைந் தாழியோ ரேழும்விட் டகலச்
ஏனை வானவ ரிருக்கைவிட் டிரியலுற் றலையாச்
சோனை மாரியிற் சுடுகணை பலமுறை துரந்தான்.

அச்சேனைகளைக் காக்கவந்த இந்திரனுடைய ஐராவதம் பயந்து கால்நடுக்குற்று ஏழுகடலுக் கப்பால் ஓடியது. மற்றத் தேவர்களும் தம் இருப்பிடம்விட்டு ஓடினர். திக்கு யானைகளுடைய கொம்புகளைப் பிடுங்கிவைத்துக்கொண்டு மேருமலை மதம்பிடித்து ஓடிவருவதுபோல் திரிந்தான். அப்பொழுது சினங்கொண்டு பற்கடித்து எழுந்த இந்திரனது பற்களை யுடைத்ததுமன்றி அவனைக் கையால் தூக்கிப் பூவுலகத்திலெறிந்தனன். இவ்வாறு பல தடவையில் தேவர்களிடம் சண்டை செய்திருக்கிறான். மறுபடியும் கும்பகருணன் நித்திரைச் சாலைக்கு வந்து தூங்கினன்.

அப்பால் பலநாட் கழிந்தன. பிதுர்வாக்கியபரிபாலனஞ் செய்யவந்த இராமன் மனைவியான சீதையை இராவணன் சூர்ப்பநகையின் சொற்படி தூக்கிச் சென்றான். அவளைத் தேடும்பொருட்டு இரவில் இலங்கைக்குவந்த அநுமன் கும்பகருணன் தூங்கும் மாளிகையின் வாயிலில் வந்தான். கும்பகருணன் தூங்கும்போது உட்கொள்ளும் காற்று,அநுமனை வாசலிலிருந்து மூக்குவரையும் வெகு விரைவாக இழுத்து வந்தது. அநுமன் அவன் மூக்கில் புகுவதற்கஞ்சிக் கைகால் நடுக்குற்றுப் பக்கத்தில் விலகிக் குதித்தான். திரும்ப வெளிப்பட்ட மூச்சுக்காற்றுத் தூசிகளைப் பரத்திப் பிரசண்ட மாருதம்போல் ஊழியின் வரவை எதிர்பார்த் துழல்வ தொத்தது. மந்திரத்தால் கட்டுண்ட நாகம்போலவும் கலியுக முடிவை எதிர்பார்க்கும் கடல்போலவும் தூங்கும் அக்கும்பகருணனை அநுமன் கண்டு இராவணனென்று சந்தேகித்துக் கோபித்தான். பிறகு அநுமானத்தால் இராவணனில்லையென்று தீர்மானித்துச் சென்றான்.

அநுமன் வந்து சீதையைக் கண்டு தான் வந்ததற் கறிகுறியாக இலங்கைமா நகரத்தைத் தீக்கிரையாக்கினான். பிறகு கவினழிந்த நகரை மயன்முதல் தெய்வத் தச்சர்கள் முன்னைவிடப் பதின்மடங்கு அழகாக அமைத்த தன்பின் இராவணன்மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் குறித்து யோசிப்பதற்கு ஓர் மந்திராலோசனைச் சபை கூட்டினான். அச்சபையில் மந்திரத்திற்குரிய மந்திரிகளும் மற்றும் அரக்கரும் வந்து தத்தம் அபிப்ராயங்களைக் கூறினர். ஆலோசனையின்றிக் கூறும் அக்கூற்றுக்களைக் கேட்ட கும்பகர்ணன் அவர்களனைவரையும் இருக்கச்செய்துவிட்டு இராவணனுக்குத் தன் அபிப்ராயத்தைத் தெரிவிக்கலாயினான்.

ஐய! நீ உயர்ந்த பிரம்மகுலத்திற் பிறந்து ஆயிரக் கணக்கான வேதங்களைக் கற்ற அறிவுடையனாயினும் தீயகாரியத்தைச் செய்தனை யாதலால் வந்ததை யனுபவிக்க வேண்டியதே. சித்திரங்களமைந்த இலங்கைமா நகரம் தீ யெரிபெற்றதால் அரசியல்முறை யழிந்ததென வருந்தும் நீ, வேறு குலத்தவன் மனைவியிடம் ஆசைவைத்து அவளைச் சிறைவைத்த செயல்நன்றோ? பாவிகள் செய்யும் பழி இதைவிட வேறு உண்டோ? நல்ல நகரம் அழிந்ததென்று நாணும் நீ, உன்னுயிரனைய தேவியரனைவரும் நகைக்க வேறொருவன் மனைவியின் காலில் விழுந்தோறும் அவள் கடுஞ்சொற்கூறி இகழ்ந்துமறுத்த லுனக்குப் புகழேயோ ?

ஒருவனது கற்புடைமனைவியை எப்பொழுது களவாடிச் சிறைவைத்தனையோ அப்பொழுதே அரக்கரது புகழ் போயிற்று. இகழினால் புகழடைதல் அறிவுடைத்தாகுமா?

ஆசில்பர தாரமவை யஞ்சிறை யடைப்போம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
பேசுவது மானமிடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்றுநம கொற்றம்

உயர்ந்தோர் செய்கை செய்தாயில்லை. குலச்சிறுமை செய்தாய். இனியச் சீதையைவிட்டு இளைப்பதைவிட அவளைவிடாது அவர் கையால் மாளுதல் நலமாகும். பழியுமன்று.

காட்டில் தனித்திருந்து வில்வலத்தால் கரதூடணாதியரைச் சேனையுடன் கொன்றதும், அவனுடைய வலிமைக்குப் போதியதன்று. அக்கதியைத் தவிர வேறு உறுதி நமக்கு யாதுளது? அம்மானிடரே வெற்றிகொள்வாராயினும், நாம் விலகாதுபொருது அவர்களை யழிக்கவில்லையானால், தேவர்முதல் ஏழுலகத்தாரும் அம்மானிடர்பக்கம் சேர்ந்துகொள்வார். ஆதலால் அவர்களுக்குப் படைத்துணை சேர்வதற்கு முன் நாம் கடல்கடந்து, மானிடரும் வானரமும் வேறிடம் போகாமல் தடுத்து அவர்களை வேரோடு கொல்ல வேண்டுவதே தொழில்.' என்று கூறினான். இராவணனும் இதை அங்கீகரித்தான்.

அப்பால் இராவணன் முதல்நாள் யுத்தத்தில் தோல்வியடைந்துவந்து வெட்கத்தோடு இருக்கும்பொழுது மாலியவான் அவனுக்குப் பல புத்திமதிகளைக் கூறக்கேட்ட மகோதரன் வெகுண்டு,

புன்னுனைப் பனிநீ ரன்ன
மனிதரைப் பொருளென் றுன்னி
என்னுனக் கிளைய கும்ப
கன்னனை யிகழ்ந்த தெந்தாய்.

ஆதலால் கும்பகன்னனை யழைத்துப் போருக்கனுப்பினால் அவனதுருவைக் காண்டலுமே அவர்கள் பயந்தொளிப்பர். இல்லையேல் அத்தாபத ருயிரை அவன் வாங்கிவிடுவான்'' என்றான்.

இராவணன் மனங்கொண்டு 'இப்பொழுதே சென்று கும்பகர்ணனை யழைத்து வாருங்க'ளென்றேவினான். உடனே நான்கு கிங்கரர் விரைவிற் சென்று கும்பகர்ணன் துயிலுகின்ற கோவில் வாயில் நுழைந்து "கும்பகர்ண மகாராஜனே விழித்தெழுந்தருளா'' யென்றுகூறித் தம் கையிலுள்ள இருப்புலக்கையால் தலையிலும் காதிலும் குத்தினர். அதற்குங் கும்பகர்ணன் தூங்குவதைக்கண்டு மறு

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

12. கார்முகப் படலம்

[389 பக்கத் தொடர்ச்சி]

பெண்மையோ வாண்மையோ பண்பினிற் பிழைத்தது.

இற்றது வில், இனித் தமதருஞ்சீதையும் பெற்றனள் நன்னலம் என மகிழ்ந்து நின்றனர் மிதிலையின் மாதர். அந்தக்காலை

ஐயன்வில் லிறுத்த வாற்றல்
காணிய வமரர் நாட்டுத்
தையலா ரிழிந்து பாரின்
மகளிரைத் தழுவிக் கொண்டார்
செய்கையின் வடிவி னாடல்
பாடலிற் றெளித றேற்றார்
மையரி நெடுங்க ணோக்க
மிமைத்தலு மயங்கி நின்றார்

[இராமன் வில்லை ஒடித்த ஆற்றலைக் காணும்பொருட்டுத் தேவலோகக் கன்னியர் இறங்கிவந்து அங்கிருந்த பூலோக மாதரை அணைத்து நின்றனர். இவர்களது செயல்களினாலாவது, ஆடல் பாடல் முதலியவைகளாலாவது, தம் மினத்தைச் சேர்ந்தவர்களல்லர் என்று அவர் அறிய இயலவில்லை. ஆனால் மையிட்ட பெரிய கண்கள் இமைத்தலும் 'என்னே நம்மைப்போன்ற தேவகன்னியர் இவர் இமைக்கின்றனர்'' என்று மயங்கலாயினர்]

இமைப்பதா லல்லாமல் அரம்பையர்க்கும் இந்நகர அரிவைமார்க்கும் வேறுபாடிலது. இத்துணை அழகு வாய்ந்த இவர் களிசிறந்த உள்ளத்தராய்,

தயரதன் புதல்வ னென்பார்
தாமரைக் கண்ண னென்பார்
புயலிவன் மேனி யென்பார்
பூவையும் பொருவு மென்பார்
மயலுடைத் துலக மென்பார்
மானிட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகுங்
கடவுளே காணு மென்பார்.

[தயரதன் புத்திரன் என்று சிலர் பாராட்டுவார். தாமரைக் கண்ணன் என்பார் சிலர். இவன் நிறம் மேகம் போன்றது என்பார் சிலர். சிலர் அது காயா மலரையும் ஒக்கும் என்பார். பேராசையுடையது இவ்வுலகு என்பார் சிலர். இவன் மனிதனே அல்லன் என்பர். கயல்மீன்கள் புரள்கின்ற கடலில் வசிக்கும் கடவுளாகிய திருமாலே இவன் காணுங்கள், என்பார் சிலர்]

இது, ஒன்றுகூடி உரையாடிய மாதர் குழுவினுள் ஒரு பகுதியினிடையே நிகழ்ந்திருத்தல் வேண்டும். கார்முகத்தைக் கண்ணுற்ற ஆடவர்களும் பெண்டிரும் முன் இயம்பியவைகளைக் கம்பர் 'என்பார்' எனத் தனித்தனியாக முடித்தாரேனும், அவைதாம் ஒன்றினொடொன்று தொடர்புடையனவாய் வளர்ந்தவாறு கண்டவாங்கே இங்கும், 'தயரதன் புதல்வன்', என்றது முதல் 'கடவுளே காணும்' என்பது ஈறாக இடைவருவனயாவும் தொடர்ந்தே நடக்கின்றன. "எங்கோமகட்கு நாயகனாய இவன், பொதுவறப் பொலியும் தயரத மன்னவன் புதல்வனே யாயினான்'' என்ற பேருவகையை ஒருத்தி கொண்டாடவும், மற்றொருத்தி, "குலமோ அதுவாயின் இவன் அழகுதான் என்னே'' எனவியந்து உறுப்பிற் சிறந்த கண்களைப் பாராட்டினள். 'தாமரைக்கண்ணன்' என்ற சொற்றொடர் திருமாலை நினைவுபடுத்துதல் இயற்கை. உடனே, இன்னொருத்தி தாமரைக்கண்ணன் மாத்திரம் ஆவதல்லாது புயலும் பூவையும் ஒத்த மேனியனாவதையும் குறித்துத் திருமால் இவன் என்ற அகக்கருத்தை எடுத்து வளர்த்தனள். அயலொருத்தி ஊக்கம் மிகுந்தவளாய், "இவனைப்போய் ஏனைய மாந்தரோடு சேர்த்து இப்பூமியைச் சேர்ந்தவன்தான் என்று பேசுவது, தனக்கு உரியதல்லாததைத் தனதேயென நினைக்கும் பேராசையோ, மற்று அப்பேராசையால் பிறந்த மதியீனமோ வாகும். உலகம் இன்று இவ்வாறு எண்ணியிருக்கின்றது ஆகையால் அது மையலுடையது'' என்றாள். தாமரைக்கண்ணன்—புயல்வண்ணன், பூவைவண்ணன்—இவன் இம்மண்ணுலகத்தவனெனல் வீணாசை—என்பவைகளைக் கேட்டவள் ஒருத்தி துணிந்து 'மானுடன் அல்லன்' என்று மறுத்துவிட்டாள். இனி என்! "கயல்பொருங் கடலுள் வைகும் கடவுளே'' என்று பிரிநிலை ஏகாரத்தோடு அவன் திருமாலே என்று உடன்பாட்டு வகையில் உறுதி கூறலும் நெறிமுறை வழுவாது நிகழ்ந்த மொழியாகும். இவ்வாறு பெருகிய உவகையோடு குழுமிய இம்மிதிலையர் சிந்தையும் தீர்த்தனென்று அவனைமெல்லமெல்லஅறிந்தது போலும். "கண்ணனே இவன் கண்டிரும்பின்' என்றாள் பின்னாள் இவனை உலாவரக் கண்டவள் ஒருத்தி.

இதனினும் இனியன இன்னொரு குழுவினர் இயம்பிய மொழிகள். இப்பெருமகனது தனிப்பேரழிலை வியந்து புகழ்வாள் ஒருத்தி, "நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்'' என்றனள். இற்றைநாள் நம் அனுபவத்திற்கிணங்கிய உலகநடைப்படி வருவதாயின், இவ்வாசகம் அயோத்திமாதர் வாய்நின்று வருவதற்கே உரியதாம். நன் மகளுக்கும் நன் மகனுக்கும் திருமணம்நேருங்கால் இவ்விருவரையுஞ்சேர்ந்த சுற்றத்தார், மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் எய்தப் பாக்கியம் செய்துளர் எனப் பொதுமைபடப் பேசுவாரேனும், பெண்ணகத்தார் அழகு முதலிய நலங்களில் தம் மகளே சிறிது சிறந்தவளென்று மதிப்பவ ராகின்றனர். மணமகன் திறத்தவர் தன்மையும் அன்னதே. இராமனது அழகாலும், இப்பொழுது உற்ற களிப்பினாலும் தன் தகை தடுமாறி நின்றாள் ஒருத்தி இவ்வுலக நடை இயல்பிற் பிறழ்ந்து, நம்பியைக் காணச் சீதைக்குக் கண்கள் ஆயிரம்வேண்டும் எனச் செப்பியது, இராமனுக்கே ஏற்றம் வைத்துச் சொல்வது போல் தோன்றியதாதலால், அருகிருந்து கேட்டிருந்தவள், "மற்று, நம் நங்கையின் அழகுதான் தாழ்ந்ததோ! இவளை நோக்குதற்கு அவனுக்கு ஆயிரங்கண்கள் பற்றுமோ! ஒவ்வொருமுறை பார்ப்பதற்கும் அவனுக்குப் புதியபுதிய நயனங்கள் ஓராயிரம் வேண்டாவோ'' எனத்தகைபவளாய்"கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்'' என்று விளம்பலுற்றனள்.

சிவபிரான் பிடிக்கு,மொரு சிலையொடிந்த பேரொலியே சேராத சானகியின் செவி, இங்கிவர் உரைத்த சில சொற்களுக்கு இலக்காவதெங்ஙனம்! ஒன்றும் அவள் அறிந்திலள். உணர்வினை நலியச் செய்த இரவு தான் நொய்தின் ஏகப் புலரிவந் துதித்தகாலை, அவள்

ஊசலா டுயிரி னோடு
முருகுபூம் பள்ளி நீங்கிப்
பாசிழை மகளிர் சூழப்
போயொரு பளிக்கு மாடக்
காசிறு மரையின் பொய்கைச்
சந்திர காந்த மீன்ற
சீதநீர் தெளித்த மென்பூஞ்
சேக்கையை யரிதிற் சேர்ந்தாள்.

[போவதும் வருவதும் ஆகி ஊஞ்சல்போல் ஆடுகின்ற உயிரினோடு, காமத் தீயினால் உருகிய தன் மலர்ப்படுக்கையை விட்டெழுந்து, பசும் பொன்னாற் செய்த ஆபரணங்களை யணிந்த தாதியர் செவிலியர் தோழியர் முதலாய மாதர்கள் தன்னைச் சூழ்ந்துவர, போய், குற்றமற்றவோர் தாமரைக் குளத்தின் நடுவிலுள்ள பளிங்கு மாளிகையின்கண், சந்திரகாந்தக் கல்லிலிருந்து கசிந்தருகிய குளிர்ந்தநீர் தெளித்துள்ள மிருதுவாகிய ஒரு புஷ்ப சயனத்தை அடைந்தாள்]

அடைந்தவிவள் பிரிவாற்றாது புலம்புகின்ற சில பாசுரங்களுக்குச் சந்த இனிமையாலும் பொருளின் நயத்தாலும் தமிழின் அழகினாலும் நேராவன அவைகளே. பளிங்கு மண்டபத்தில் தண்மலர்ப் பள்ளி நின்று கமலவாவியை நோக்கினாள். பச்சையிலைகளும் சிவந்த மலர்களுந் தோன்றின. தோன்றவும்,

பெண்ணிவ ணுற்ற தென்னும்
பெருமையா லருமை யான
வண்ணமு மிலைக ளாலே
காட்டலால் வாட்டந் தீர்ந்தேன்
தண்ணறுங் கமலங் காளென்
தளிர்நிற முண்ட கண்ணின்
உண்ணிறங் காட்டி நீரென்
உயிர்தர வுலோவி னீரே.

[இங்குவந்த யான் ஒரு பெண் எனப் பரிந்து அந்தப் பெருந்தன்மைபற்றி, என் (உயிராகிய அக்குரிசிலின்) அருமையான நிறத்தை இலைகளாற் காட்டப்பெறுவதால், அதைக்கண்டு சிறிது வாட்டம் தீர்ந்து ஆறுதல் அடைந்தேன். குளிர்ச்சியும் மணமும் வாய்ந்த தாமரைகளே, (நீங்கள் நன்றாக மலர்ந்து) எனது மாந்தளிர்போன்ற நிறத்தைக் கவர்ந்து சென்ற (அச் செம்மலது) கண்களின் உட்புற நிறமுங்காட்டி என்னுடைய உயிரை அளிக்காமல் ஏனிப்படி உலோபம் செய்கின்றீர்]

சானகி அவ்வாவிசூழ்ந்த மாளிகை எய்திய நேரம் வைகறை யாதல் வேண்டும். பரிதி வந்திலன், பங்கயங்களும் பொதியவிழ்ந்தில. இலைகளிற் றன்காதலன் கருநிறத்தை கண்ணுற் றுறினள். கதிரோன் வருமளவும் மையலுற்றோர் காமநோய் தீராதலின், சீதையும் பகலவன் வருகைக் கவாவினாள். மையலாலொருவாறு மயக்குற் றிருக்கின்றா ளாதலால் காரணகாரிய முறை யொருசிறிது தடுமாறிய வம் மடவரல், அரவிந்த மிங்கலர்ந்தா லிரவியுமங் குதிப்பனென உன்னினளாய் நயமொழி பகர்ந் தவைகளை மலருமாறு தூண்டுகின்ற சூழ்ச்சியை இச்செய்யுளிற் காணலாம். "இலைகளோ அவன் திருமேனி வண்ணத்தைக் காட்டுமாற்றால் தங்களாலான உதவியை எனக்குப் புரிந்தன. மலர்களே, நீங்களோ இலைகளின் உயர்ந்தவர். ஆயின் அவன் கண்ணின் உண்ணிறத்தை எனக்குக் காட்டப்படாதென்று ஏன் இன்னும் குவிந்திருக்கின்றீர். தாழ்ந்த இலைகளுக்கிருக்கின்ற பெருந்தன்மை நுமக்கில்லாது போனதும் ஏனோ! இவ்வுலோபம் நுமக்கொரு குறையேயாகும். ஆதலின் விரைவினில் மலர்மின்" என்ற கருத்தது இவ்விருத்தம். நளினங்கள் மலர்வதால் அவன் நயனங்கள் நிறத்தைக் காணலாகலாம் என்ற ஆசைகொண்டு இது கூறினாள்போல் தோன்றுமெனினு மிஃதொன்றுமே தன்னுயிர்தந்ததாயமையாதெனுங் கொள்கையை அவ்வனிதை

நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும்வாளி யோடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவுங்
காணலாகு மாகினாவி காணலாகு மேகொலாம்.

[நாண்கயிறு கட்டியவொரு மேருமலை போன்ற வில்லும், என்னுடைய நாணத்தைக் கவர்ந்துகொண்டு வைத்திருக்கின்ற கையும், கற்றூண்போன்ற தோளும், அம்புகள் நிறைந்த தூணியும், ஒளிபொருந்திய நிலாக்கதிர்போல் பூணூல்மாலை புரள்கின்ற மார்பும், இனியொருமுறை நான் காணக் கூடுமெனின் என் உயிரையும் மீண்டும் கண்டவளாவேன்]

என்னுமாற்றால் செப்ப லாகின்றனள். காந்தத்தால் கவர்ந்து கலந்த ஊசியும் காந்தமாவதுபோல் காதலனொடு கலந்த இவளுயிரும் காதலனே யாயது.

இவ்விதம் காதலன் உருவத்தையே தனதுயிர்க்குத் தந்த விக்காரிகை, இனி அதனை உருவகஞ் செய்வதும், அவனியலைப் பழித்தலும், தன்னுடைய தவமின்மையை நோதலும், உருவெளி காண்டலும், நெஞ்சொடு கிளத்தலும், எளிமைக் கிரங்குதலும் ஆதிய நினைவுகளைமேற்கொண்டு பலபன்னுவாளாகின்றனள்.

விண்டலங் கலந்திலங்கு திங்களோடு மீதுசூழ்
வண்டலம் பலங்கறங்கு பங்கியோடும் வார்சிலை
கொண்டலொன் றிரண்டுகண்ணின் மொண்டுகொண் [டென்னாவியை
உண்டதுண்டெ னெஞ்சினின்று முண்டதென்று [முண்டரோ.

[ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற சந்திரனோடும், மேலே சூழ்ந்த வண்டுகள் ஒலிக்கும் மாலைதங்கிய சிகையோடும், நீண்ட வில்லோடும் வந்த மேகம் ஒன்று, தன்னுடைய இரண்டு கண்களாலும் என்னுடைய உயிராகிய நீரை மொண்டு குடிக்க நேர்ந்ததுண்டு. அம்மேகம் இன்றைக்கும் என்றைக்கும் என் நெஞ்சைவிட்டு அகலாது இருப்பதாம்]

பஞ்சரங்கு தீயினாவி பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்க ணெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங் கலந்தபோது தையலாரை யுய்யவந்
தஞ்சலஞ்ச லென்கிலாத வாண்மையென்ன வாண் [மையோ.

[கொடியமன்மதன் தன்னுடைய நீண்ட வெற்றிவாய்ந்த வில்லினால், பஞ்சை அழிக்கும் தீயைப்போல் என் ஆவியைப் பற்ற நெஞ்சிலே அழுந்தும்படி, வெய்ய பாணங்களை எய்ய, அதனால் துன்பத்திற்காளாகி வருந்தும்போது தையலாரைக் காப்பாற்றுவதற்கு விரைந்துவந்து அபயம் அளிக்காத ஆண்மையும் ஒரு ஆண்மையாகுமோ]

பேதைச் சீதை யாது கருதி இது கூறினாளோ தெரிதலரிது. தாமரைப் பொய்கையிடையிருந்த வம்மண்டபத்தினகவயி னன்று அக்காதலன் எதிர்வந்து தோன்றவில்லையெனப் பழிகூறிய கொள்கையாகுமோ விது! அது நேரிதன்று. பெரும்புகழ்ச் சானகியோ அதனையும் அறிந்து,

தெருவே திரிவா ரொருசே வகனார்
இருபோ தும்விடா ரிதுவென் னைகொலாம்
கருமா முகில்போல் பவர்கன் னியர்பால்
வருவா ருளரோ குலமன் னவரே.

[நல்ல குலத்தில் பிறந்த அரசக்குரிசிலா யிருப்போர் கன்னியர் தனியாயிருக்குமிடத்தில் வருவது தகுமோ! மற்று, விச்வாமித்திரனுடன் தெருவில் திரிந்த வொரு கருமுகில் போன்ற வீரன் இரவிலும் பகலிலும் என்னைவிட்டகலாது இருக்கின்றானே—என்னவிந்தை இது!]

என்னக் கடிமணம் நடைபெறவிருந்த நாளிற்கு முன்மாலை மொழிந்தனள். வாராமைதலால் ஆண்டகையல்லன் என்று இங்கு அவனியற் பழித்தவள் மீண்டு மங்கு வந்தகன்றிலன் என்னப் பழிப்பவளும் ஆகின்றாள். காதலாற் கலங்கிய சிந்தனை ஒருநெறிப் படர்தல் அருமை.

தையலாரை வந்தளிக்க விரைந்திலாத அவன் ஆண்மையைப் பழிக்குமளவில், ஒருகால் தனது பெண்மையிற்றான் பழுதுண்டோ, என இடையே அயிர்த்தனள் என்ன,

இளைக்கலாத கொங்கைகா ளெழுந்து விம்மி
யென்செய்தீர்
முளைக்கலா மதிக்கொழுந்து போலும்வாண்
முகத்தினான்

வளைக்கலாத விற்கையாளி வள்ளன்மார்பி
னுள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள்
செய்மினே

[இளைத்தலின்றி மிகக்கொழுத்த கொங்கைகளே, நீங்கள் பருத்துவிம்மி என்ன பயனைப் பெற்றீர். உதித்தலைச் செய்கின்ற சந்திரன் கொழுந்துபோன்ற பிரகாசம் பொருந்திய முகத்தையுடையவனும், யாவராலும் வளைப்பதற்கும் முடியாத வில்லொன்றைக் கையில் தாங்கியசிங்கம்போன்றவனும் ஆகிய அப்பெருமகனது மார்பினுள் பொருந்தி அனுபவிக்கின்ற நலம் உங்களுக்கு வேண்டுமாயின், இப்படிப் பருப்பதை விட்டு, அதற்குச் செய்யவேண்டிய தவங்களைச் செய்யுங்கள்]

தவத்தை முன்னிய சிந்தையளாயினாள். அவ்வளவில், தவத்தினர்க் கருள்புரியும் பெருமகன் எதிர்வந்து தோன்றினான்; இவ்வுருவெளித் தோற்றத்தைக் கண்ட சீதை,

எங்குநின் றெழுந்ததிந்த விந்துவந்தெ னெஞ்சுலா
அங்கியன் றனங்கனெய்த வம்பின்வந்த சிந்தைநோய்
பொங்குகின்ற கொங்கைமேல் விடம்பொழிந்த தென் [னினும்
கங்குல்வந்த திங்களன் றகங்களங்க மில்லையே.

[வந்து, என் நெஞ்சில் பாய்ந்து தங்கும்படி மன்மதன் எய்த அம்பினால் உண்டான மனநோயால் பொங்குகின்ற முலைகளின்மீது விஷத்தை இதுவும் பொழிகின்றதானாலும், நேற்றிரவு வந்த சந்திரன் அன்று இது. ஏனெனில் இதன் மத்தியில் களங்கம் இல்லை. களங்கம் இல்லாமல் விஷயம் பொழிவதாய்க் காலையிலும் தோன்றுகின்ற இப் புதிய சந்திரன் இதுகாறும் எங்கிருந்து இப்பொழுது வந்து தோன்றுகின்றது! அறிகிலேனே]

என்று அவ்வுருவின் களங்கமற்ற மதிமுகத்தைப் பாராட்டினள். விடம் பொழிவதென்றது தன் தனத்தில் தைக்கின்ற அதன் பார்வையைப்போலும். தன்னுடைய உயிர் தனியுரு ஒன்றுபெற்றால் அது என்னவா றிருக்குமென அவள் முன் சொன்னதற்கிணங்க இங்கு,

அடர்ந்துவந் தனங்கனெஞ் சழன்றுசிந்து மம்பெனும்
விடங்குடைந்த மெய்யினின்று வெந்திடா தெழுந்து [வெங்
கடந்துதைந்த காரியானை யன்னகாளை தாளடைந்
துடன்றொடர்ந்து போனவாவி வந்தவாறென் னுள் [ளமே.

[மனமே, மன்மதன் நெருங்கிவந்து நெஞ்சு எரிய எய்யும் அம்பு என்னும் விஷம்பாய்ந்த என் சரீரத்தால் வெந்து அழியாதபடி, அதைவிட்டு நீங்கி, கொடிய மதம் செறிந்த கரியானையன்ன இளமகன் கால்களில் தஞ்சம் புகுந்து அவனோடு தொடர்ந்துபோன என் உயிர் இன்று திரும்பி வந்தது என்ன காரணம்]

என்று அது மீண்டதற்குக் காரணம் வினவுகின்றாள். ஆயினும் அவ்வுயிரேயனைய உருவம் போவதும் வருவது மாவதெனும் இக்கொள்கை பேதைமைத் தென்பாள் பின்னர்,

விண்ணுளே யெழுந்தமேக மார்பினூ லின்மின்னொடும்
மண்ணுளே யிழிந்ததென்ன வந்துபோன மைந்தனார்
எண்ணுளே யிருந்தபோதும் யாவரென் றுதேர்கிலேன்
கண்ணுளே யிருந்தபோது மென்கொல்காண் கிலா [தவே

[ஆகாயத்தில்உண்டான மேகம் மார்பிலணிந்த பூணூலாகிய மின்னலோடுகூடிப் பூமியின்கண் இறங்கியதையொக்க வந்துபோன அத்திருமகன், எனது கருத்திலே யிருந்தபோதும் யாவன் என்று தெரிந்துகொள்ளவில்லை. கண்ணிற்குள் இருந்தபோதும் கண்டிலேன். என்ன விந்தை இது]

எனவியந்து,

பெய்கடற் பிறந்தயற் பெறற்கொணு மருந்துபெற்
றையபொற் கலத்தொடங்கைவிட்டிருந்தவாதர்போல்
மொய்க்கிடக்குமண்ணரோண்முயங்கிடாதுமுன்னமே
கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்ப தென்கொலோ

[இந்திரன் செல்வமெல்லாம் தூர்வாசர் சாபத்தால் போய்விழுந்த கடலிலிருந்து பிறந்ததும், வேறெங்கும் பெற இயலாததுமான, அமிர்தத்தைப் பெற்றும், அதை அருந்தாமல் பொன்கலத்தோடு கைநழுவவிட்ட மதியிலியைப்போல், வலிதங்கிய அச்செம்மலின் தோளை அணைத்து இன்புறாது முன் செவ்விவாய்த்தபோது கைகடக்க விட்டு விட்டு இப்பொழுது நான் பலபடப் பேசுவது என்ன புத்தியோ]

என்று பரிந்து தளர்வாளாயினாள் நிறைநணியழிந்த மொழி இது, உண்மையே. ஆயினும் அண்ணல் தோள் தழுவுதற்குச் சீதைக்கு வாய்ந்த அமயம் எது வென்பது தெரிதற்கில்லை. முன்னாள் கன்னிமாடத்தினின்று கண்ணுற்றவளவில் கால்கழன்றோடி அண்ணலை வீதிவாய் அணைத்துத்தான் அழைத்துவந்திருத்தல் வேண்டும் என மதித்தனளோ, யாதோ! காதல் தூண்டும் பேதைமை கணக்கிடற் பாலதன்று.

இன்னபல பன்னிப்பன்னிச் சீதை இங்கு நைந்து நைந்து விம்மிவிம்மியே வைகுமப்போழ்திற்றான் இராமனங்கு நெடுஞ்சிலையை நொடிப்பொழுதில் இறவளைத்துக் காதல்வீரனாய் நிற்கலானது. மன்னவன் மண்டபத்தில் நிகழ்ந்த தொன்றும் அறியாமலும் அவ்வவைக்கண் இருந்தவரும் அயலிற் குழுமியவரும் உரைத்ததொன்றுங் கேளாமலும் இவ்வணங்கு அமைதற்பொருட்டே கம்பர் அவளை அதிகாலையிலேயே கன்னிமாடத்திலிருந்து அழைத்து வந்து சோலையின் நாப்பண் ஒரு வாவிமாளிகையில் அமர்த்தினர். மூவேழுலகும் அவ்வில்லினது இடியினால் கம்பர் பிதிரவைத்தாரேனும், உண்மையில் அதுபின் நீலமாலை சொன்னவண்ணம் 'வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்தது' என்பது இயற்கையாம். அவ்வோசை நங்கையிவள் தங்கிய சோலைவரை தானும் எட்டியிராது. மற்று, கம்பர் செலுத்துமளவு அவ்வோசை சென்றதெனினும் தன்னுள்ளமும் உணர்வும் பொறியாவும் அத்திருமகன் உருவின் வாய்த் துறந்திருக்கும் இச்சீதையின் செவியைச் சாராததும் இயற்கையே.

இந்நிலையளாய தன் தலைவியின்முன், நெடுந்தடங் கிடந்தகண் நீலமாலை நொய்தின் எய்தினாள்.

வந்தடி வணங்கிலள் வழங்கு மோதையள்
அந்தமி லுவகைய ளாடிப் பாடினள்.

தன்னைப் பணிதலுமின்றி இவள் ஆடிப்பாடி ஆரவாரஞ் செய்வதன் காரணம் உணராச்சீதை, "சுந்தரி, சிந்தையுண் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும் சொல்" என வினவுதலும், நீலமாலை வில்லிற நிகழ்ந்ததைத் தொழுது விளம்பினாள். இவள் சொன்ன குறிகளைக் கொண்டு மெல்லியற் சீதை தான் கன்னிமாடத்தினின்று கண்ட காளையும் இவ்வில்லிறுத்த வீரனும் ஒருவனோ மற்று வேறிருவரோ வெனத் துணிவதும் அயிர்ப்பதுமாய நயத்தினை முன்னோரிடத்தில் கூறலாயிற்று. ஐயமற இதனைத்தேர்தற்குப் பின் மணமண்டபம் நண்ணுமளவும் யாதும் முயன்றிலள்.

வில்லிறும் ஓசையிற் பெரியது ஒன்றுளது. அது சனகன் எய்திய உவகை. அன்னான் கோசிக முனிவனோடுசாவித் தயரதன்பால், 'இயைந்தவாறெலாஞ் சொல்லுக' வென்று ஓலையுந் தூதும் போக்கினான்.

எம் சொந்தப் பிரசுரங்கள்.

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

கோபால் புதிய தமிழ் வாசகம்.
ஆ. மா. ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

	ரூ.	அ.	பை.
1-ஆம் வகுப்பு	0	2	6
2-ஆம் வகுப்பு	0	3	0
3-ஆம் வகுப்பு	0	4	0
4-ஆம் வகுப்பு	0	4	6
5-ஆம் வகுப்பு	0	6	0
ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது	0	5	0
சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது	0	5	0
கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. நா. கன்னையா எழுதியது	0	5	0
சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயராமய்யர் B.A., L.T., எழுதியது	0	5	0
ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது	0	5	0
தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது	0	4	0
கோபால் வாய்ப்பாடு	0	1	[illegible]
புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) வ. பரசுராமய்யர் எழுதியது.	0	10	0
கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது	0	8	0
பகீரதன், பண்டிதர் அ. நா. கன்னையா எழுதியது	0	6	0
பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது	0	6	0
சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது	0	12	0
இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது	0	6	0
முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது (அச்சில்)	0	6	0

English publications.

English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T.,	0	12	0
Nanda the Paraiah Saint by C. S. Rangaswami Iyengar B.A., L.T.,	0	3	0
Fables from Mahabharata. by Paramasiva Iyer. B. A., L.T.,	0	3	0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. G. PAUL & Co.,
Publishars
Francis Joseph Street, Madras.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவர் மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,
தங்கசாலைவீதி, மதராஸ்.

Our Publications.

Kamban's Kosala.

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதிசயம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

வர்த்தமானம்

மெக்ஸிகோவில் மதுவிலக்கு:—மெக்ஸிகோ குடியரசுத் தலைவர் மதுவிலக்கையொட்டி ஒரு பெரிய திட்டம் ஒன்று தயார்செய்து வருகின்றனர். சீக்கிரத்தில் மதுவிலக்குக் கமிட்டிஏற்படும். பிரசாரத்தின் மூலமாயும் சட்டமூலமாயும் மதுவை விலக்கவும் கள்ளுக்கடைகளை மூடவும் ஏற்பாடு செய்யப்படும்.

***

அமெரிக்காவில் உண்ணாவிரதம்:—அமெரிக்க நியூயார்க்குச் சர்வகலாசாலை யொன்றில் மாணவர் சாப்பாட்டுவசதி கவனிக்கப்படவில்லை யென்றும், நல்லதல்லாத உணவுப் பொருள்களே உபயோகப்படுத்தப் படுகின்றனவென்றும், மாணவர்கள் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்து வருகின்றனரென்று ஒரு தந்திச் செய்தி கூறுகின்றது.

***

காந்தி அடிகளின் சுற்றுப்பிரயாணம்:-கதர்நிதியின் பொருட்டுக் காந்தி அடிகள் தெலுங்கு தேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்றார். காதிரி என்ற கிராமத்தில் 1216 ரூபாய், நிதிக்கு வசூலாயிற்று. யூனியன் போர்டார் ரூ 50 கொடுத்தனர். சித்தூரிலும் பணம் வசூலாயிற்று. மொத்தம் காதிரியிலும் சுற்றுப் பக்கங்களிலுமாய் ரூ 7000 வசூலாயுள்ளது எனத் தெரிகின்றது.

***

மீரத்தில் போலீஸ் சோதனை:—மீரத்தில் வெடிகுண்டு செய்ததாகக் மோஹன்லால் என்பவர் கைது செய்யப்பட்டதை ஒட்டிப் போலீசார் மே மாதம் 17-ந்தேதியன்று மீரத்துக் காங்கிரஸ் ஆபீஸைச் சோதனை இட்டனர். சில கடிதங்களையும் மோஹன்லாலின் டையிரியையும் போலீஸார் எடுத்துக்கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்ட மோஹன்லால் பக்கம் ஸ்ரீமான் நாரிமன் வாதிப்பார் என்று தெரிகிறது.

***

சென்னையில் டாக்டர் மூஞ்சே:—தென் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் டாக்டர் மூஞ்சே ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் தலைமையின்கீழ், தங்கசாலைத் தெருவிலுள்ள குஜராத்தியர் வாசகசாலையில் ஒரு பிரசங்கம்செய்தார். இந்து மஹா சபையின் வேலைக்கு இந்துக்கள் துணைதரவேண்டுமென்றும் ஸ்ரீ லஜபதிராய் நிதிக்குப் பணந்தரவேண்டுமென்றும் கூறினர். கூட்டத்தில் 500-ரூபாய் வசூலாயிற்று. நிதிக் கமிட்டி ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

***

வர்ணாச்ரமதர்ம மஹாநாடு:—மே மாதம் 17-ந்தேதியன்று மதுரையில், சித்திரவீதியிலுள்ள வள்ளியம்பல மண்டபத்தில் ஸ்ரீமான் T. R. இராமசந்திர ஐயர் B. A. B. L. அவர்கள் தலைமையில் கூடிற்று. ருதுவான பெண்களைப் பிராமணர் மணத்தல் கூடாதென்றும், சம்மதவயது மசோதா மதவிரோதமானதென்றும், சனாதன தர்மம் சிதையாது பார்த்துக் கொள்ளக் காவேரிக்கரையில் சமிஸ்கிருத கல்லூரி ஒன்று ஏற்படவேண்டுமென்றும் அக்கிராசனர் தமது முன்னுரையில் பேசினர்.

ஆப்கன் நிலை:—ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்டுள்ள கலக நிலையைப்பற்றிய விபரம் ஒன்றும் சரியே தெரியவில்லை. ஆப்கன் கல்விஇலாக்காவில் வேலை பார்த்த ஒருவர் இம்மாதம் 5-ந்தேதி அன்று காபூலிலிருந்து புறப்பட்டு லாகூர் வந்தனர். அவர் பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

இப்பொழுது இருக்கும் நிலைமையில் அமனுல்லாவின் முயற்சியைப்பற்றி எதுவும் சொல்ல இயலவில்லை. பாச்சாசாகோ இப்பொழுது அதிகப் படையுடனிருக்கின்றார். நாளுக்குநாள் அவர் பக்கம் உரம் பெற்று வருகின்றது. காபூலில் ஒரு மசூதியில் அமனுல்லாவின் கொடி பறந்ததற்காகப் புதியஅமீரின் உத்தரவுப்படி ஒருவன் தூக்குப்போடப்பட்டான்.

***

திருச்சி வியாபாரிகள் கூட்டம்:—மே 13-ந்தேதி திருச்சியிலுள்ள வியாபாரிகள் சங்கக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

திருச்சிக்கோட்டையில் ஒரு சாமான் ஏற்றும் நிலையம் அமைக்கப்பட வேண்டுவது மிகவும் அவசியம்.

ஏற்றுமதி இறக்குமதி விஷயமாய் இப்பொழுது இருக்கும் கால அளவு அதிகப்படுத்தவேண்டும்.

குட்ஸ் ஆலயம் காலை 10 மணிமுதல் மாலை 6மணி வரை திறந்திருக்கவேண்டும். வியாபாரிகள் வசதிக்காகட் டெலிபோன் ஒன்றும் அங்கு வேண்டும்.

கட்டணத்திலும் குறைவு கொஞ்சம் ஏற்படவேண்டும்.

***

சாண்டோ, லே. சோமசுந்தரன் செட்டியார் உணவியல்:— இயற்கை யுணவை யிகழ்ச்சி செய்யாதே. மரக்கறி யுணவே மக்கட்கு ஏற்றது. பலந்தரும் உணவே நலந்தரும் அமுதம். கனியாப் பழவகை தணியா நோய்தரும். அழுகிய இழிவ அருந்துவ தொழிக. நன்றாய் மென்று தின்றலே நன்று. வெறுஞ்சோ றின்றி நறுஞ்சுவை கலந்துண். தினமும் இருமுறை உணவே சாலும். இரவி லுண்பவை இலேசா யுண்க. அவசரத் துண்ணல் ஆரோக்கிய மன்று. பசித்தா லன்றிப் புசித்தல் கூடா. அளவுக்கு மிஞ்சின் அமுதமும் விடமே. வேளையி லுண்டல் சாலவும் நன்று. வேதா எவையும் ஆகா வுணவே. திறந்துள பண்டந் தீண்டலும் வேண்டாம். பூனை நாய் காணப் போசனம் வையேல். ஈமொய் பண்டம் எதனையும் விரும்பேல். ஆறின பண்டம் அகற்றுதல் நன்று. மாசுள பதார்த்தம் வீசுதற் குரியதே. அபக்குவ உணவை அருந்த வேண்டாம். புதுத்தானியங்களைப் பொறுத்து உபயோகி. பழைய காய்கறி பதார்த்த முண்ணேல். இலைக்கறி தயிரை இரவினி லுண்ணேல். கலப்புநெய் எண்ணெய் விலக்குதல் நன்மை. தாய்ப்பால் போன்றதே ஆப்பால் அமுதம். உப்புப் புளி மிளகாய்க் காரம் உடலைக் கெடுத்து வளத்தைக் குறைக்கும். பட்சத் தொருநாள் பட்டினி கிடக்க.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. **கலாநிலயம், வேப்பேரி, சென்னை.**

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11. VELLALA STREET.

Purasawalkam MADRAS.

189056

KALANILAYAM.
REG. NO. M, 2324.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம M. A. B. L.—51 *கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. *சேஷாசலம்,* B. A. B. L. 51 *கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. *இராமரத்நம்* ஐயர் B. A. 18 *கட்டுரைகள்.*

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. *சேஷாசலம்* B. A. B. L. 51 *இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நிஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டால் முதலாயினோர்—T. R. *இராஜகோபால்,*

7. இலகிய எற்ற ஆராய்ச்சி

E. T. *சொக்கம்மாள்* B. A; L. T. *எழுதியது* 6 *கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. *தணிகாசல முதலியார்* B. A. B. L. 8 *கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட்பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தரனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. *முத்தையர்*

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 *கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 *கட்டுரைகள்.*

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் சேலவு உள்பட:—	பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
	ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
	காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)